

பூமியை ஆளும் செயற்கை நுண்ணறிவு

செல்வகுமார் ரினோஷன்

பக்கம் 09

பக்கங்கள்: 22

THEEMPUNAL

# தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை



விசேட தேவையுள்ள குழந்தைகளும் கல்வியும்

சயனிகா ஸ்ரீகாந்

பக்கம் 10

தீ : 03 புனல்:20 09.09.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054





வர்மா

# அதிர்ச்சி தந்த சனல்

உலக சாம்ராஜ்யங்களைப் புரட்டிப் போட்டதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது. ஊழல் சதி, புரட்சி போன்றவற்றை முன் கூட்டியே கணித்து எச்சரிக்கைவிடும் ஊடகங்கள் ஒரு புறம் உள்ளன. வெளி உலகுக்குத் தெரியாது மறைக்கப்பட்ட உண்மைகளைத் தோண்டி எடுத்து வெளியிடும் ஊடகங்கள் இன்னொரு வகை.

பிரித்தானியாவில் இயங்கும் “சனல் 4” வெளியிடும் காட்சிகள் சில நாடுகளைச் சங்கடப்படுத்தியுள்ளன. பிரித்தானியாவின் சனல் 4 கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இலங்கை தொடர்பான காணொளி ஒன்றை வெளியிட்டதால் அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் வெளிநாட்டவர்கள் உட்பட 269 பேர் பலியாகினர். உலகையே அதிரவைத்தது இந்த தற்கொலைப்படைத் தாக்குதல் சம்பவங்களால் இலங்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. சனல் 4 வெளியிட்ட 50 நிமிட காணொளி பேசுபொருளாக மாறியுள்ளது.

பிள்ளையான் குழுவின் ஊடகப் பேச்சாளராக இருந்த அசாத் மௌலானா பல தகவல்களை சமர்ப்பித்துள்ளார். இலங்கையில் நிதிக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக தற்போது சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ளனர் அசாத் மௌலானா. இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு எதிராக நீண்ட விமர்சனத்தை முன்வைத்து பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தப்பட்டுள்ளன.

காணொளியில் பெரும்பாலான பகுதிகள் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அசாத் மௌலானாவும் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் அறிக்கைகளை வெளியிட்டிருந்தார். பிள்ளையான் குழுவுடன் இணைந்து ட்ரிபொலி பிளட்டூன் என்ற ஆயுதக் கும்பலை அன்றைய அரசாங்கம் உருவாக்கி, ஊடகங்களை அடக்குவதற்கும் எதிரணியினரை மௌனமாக்குவதற்கும் பயன்படுத்தியதாக அசாத் மௌலானா இதன்போது தெரிவித்திருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் பற்றிய தகவல்களுக்காக, வெள்ளை வான் குற்றச்சாட்டின் போது நாட்டை விட்டு தப்பிச் சென்ற குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி நிஷாந்த சில்வா, வெள்ளைக் கொடி வழக்கின் சாட்சியாளராக இருந்த ஊடகவியலாளர் பிரட்ரிக்கா ஜேன்ஸ், படு கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் சகோதரர் லால் விக்கிரமதுங்க மற்றும் பெயர் குறிப்பிடப்படாத பிற நபர்கள் சிலரின் வாக்கு மூலங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் காணொளியில் கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அம்பிகா சத்குணநாதன் மற்றும் முன்னாள் இராஜதந்திர அதிகாரி சரத் கொங்கஹகே ஆகியோரின் வாக்குமூலங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிள்ளையானின் அறிவுறுத்தலின் பேரில் 2018 ஜனவரி மாதம் புத்தளம் கரடிப்புல் பகுதியில் உள்ள தென்னந்தோப்பில் தௌஹீத் ஜமா அத் உறுப்பினர்களுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த சுரேஷ் சலேவுக்கும் இடையில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்ததாகவும் இதில் சஹ்ரான் உள்ளிட்ட ஜமாஅத் உறுப்பினர்கள் 6 பேர் கலந்து கொண்டதாக அசாத் மௌலானா தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பின் முடிவில் தன்னிடம் வந்த சுரேஷ் சலே, ராஜபக்ஷ ஆட்சிக்கு வர நாட்டில் பாதுகாப்பற்ற சூழலை உருவாக்க வேண்டும் என்று கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், சனல் 4 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்த ஆவணப்படத்தை தயாரித்த பேஸ்மென்ட் பிலிமிஸ் நிறுவனத்தின் ‘பென் டி பெயார்’, அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மீது நான்கு குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார். மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, கேள்விகளுக்கு பதில் கடிதம் அனுப்பி குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ள நிலையில், சேனல் 4 காணொளியில் அது குறிப்பிடப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, இது தொடர்பான குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை

▶21

# சதாம் ஹூசைனுக்காக கண்கலங்கிய அமெரிக்கவீரர்

அமெரிக்காவால் வேட்டையாடப்பட்ட உலகத் தலைவர்களில் மிக முக்கியமானவர் சதாம் ஹூசைன். சதாமின் மீது பல குற்றச் சாட்டுகளை முன்வைத்து அமெரிக்கா, ஈராக்கை ஆக்கிரமித்தது. சொந்த நாட்டுக்குள்ளேயே மறைந்து வாழ வேண்டிய நிலைக்கு சதாம் ஹூசைன் தள்ளப்பட்டார். சதாமைத் தீவிரமாகத் தேடிய அமெரிக்கப் படைவீரர்கள் சிறு குழியில் மறைந்திருந்த சதாமைக் கைது செய்தனர்.

ஒரு நாட்டின் தலைவன் என்ற மிடுக்கு இல்லாது முகமெல்லாம் தாடி, கலைந்த கேசம், அழுக்குப்படிந்த உடையுடன் தோன்றிய சதாமைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமெரிக்க சிறப்பு நிபுணர் ஆடம் ரோஜர்சன், நிற்கும் இடத்தில் இருந்து சில மீற்றர் தூரத்தில் சதாம் ஹூசைன் நின்று கொண்டிருந்தார். வர்பாக்தாத்தில் உள்ள ஈராக்கிய உயர் தீர்ப்பாய கட்டடத்திற்கு கீழே தனது அறையில் தூங்கினார்.

மார்ச் 2003 இல் ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது, அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜாஜோர்ஜ் டபிள்யூ புஷ் "பயங்கரவாதத்திற்கு சதாம் ஹூசைனின் ஆதரவை" முடிவுக்குக் கொண்டுவர விரும்புவதாகக் கூறினார்.

குறைந்தது 250,000 ஈராக்கியர்களின் மரணத்திற்குக் காரணமானவர் என்று மதிப்பிடப்பட்ட, இப்போது அதிக தாடி மற்றும் சிதைந்த சர்வாதிகாரி, போர்க்குற்றங்கள், இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் உட்பட பல குற்றச்சாட்டுகளுக்காக விசாரணையை எதிர்நோக்கினார். சதாம் ஹூசைனின் அரண்மனைகளில் ஒன்றில் அவர் சிறைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்தார். மேலும் அவரைக் காக்கும் பணியில் இருந்த 12 அமெரிக்க வீரர்களில் ரோஜர்சனும் ஒருவர்.

வெகுஜன கொலை, சித்திரவதை மற்றும் மிருகத்தனமான அடக்குமுறை ஆகியவற்றில் ஹூசைனின் நற்பெயருடன், இளம் சிப்பாய் "பாக்தாத்தின் கசாப்புக்காரன்" என்று அழைக்கப்படுபவருடன் அதிகநேரம் செலவிடும் வேலைக்கு ரோஜர்சன் தன்னைத் தாயார்ப்படுத்திக் கொண்டார். சதாமுடன் அதிகநேரம் கதைக்கக்கூடாது என்ற அறிவுறுத்தலை பாதுகாப்பு வீரர்கள் முறையாகக் கடைப்பிடிக்கவில்லை. டிசம்பர் 2006 இல் ஹூசைன் தூக்கிலிடப்பட்ட போது ரோஜர்சன் கண்ணீர் விட்டார்.

22 வயதான ரோஜர்சன் சதாமை முதன் முதலில் சந்தித்த அந்தநாளை நினைவு கூர்ந்தார்.

"நான் காவலில் முதல் ஆளாக இருப்பேன் என்று என்னிடம் கூறப்பட்டது. அது எனக்கு மிகவும் பயமாக இருந்தது, ஏனெனில் அவர் யார் என்று எனக்குத் தெரியும்," என ரோஜர்சன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"முதலில் இருட்டாக இருந்தது, அவர் தூங்கும் சத்தத்தைக் கேட்டேன். ஆனால், என்னால் அவரைப் பார்க்க முடியவில்லை... சிறிது நேரம் கழித்து அவர் எழுந்து என்னைப் பார்த்தார், நான் அவரைத் திரும்பிப் பார்த்தேன். அதுதான் முதல் சந்திப்பு.

ரோஜர்சனும் சூப்பர் ட்வெல்வ் என்று அறியப்பட்ட மற்ற காவலர்கள், வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் ஹூசைனைக் காக்கும் பணியில் ஈடுபட்டனர். உலகிலேயே மிகவும் பிரபலமான கைதியாக இருக்கும் நபருடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று வீரர்களுக்கு கூறப்பட்டது. ஆனால், அவர்கள் இந்த விதியை மீறுவ தற்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

ஈராக் மக்களால் போற்றப்பட்டவர் சதாம். அவர் எங்களைக் கையாள முயற்சித்தாரா? அல்லது எங்களுடன் உண்மையாக நட்பாக இருந்தாரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், நீங்கள் ஒருவருடன் வாழ்ந்தால், நீங்கள் அவர்களுடன் பழகப் போகிறீர்கள்."

ஹூசைன் தி ராக் என்று அழைக்கப்படும் அவரது முன்னாள் அரண்மனை ஒன்றில் கைதியாக வைக்கப்பட்டிருந்தார், காவலர்கள் அவரது விசாரணைகளுக்காக அவரை ஈராக்கிய உயர் நீதிமன்றத்திற்கு தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டியிருந்தது.

"மோர்டார்கள் வெடிப்பது, துப்பாக்கிச் சூடு சத்தம், போர் சத்தங்கள் எல்லாம் கேட்கும். சதாம் எங்களைப் பார்த்து சிரிப்பார். அவர்




கவலையின் அறிகுறிகளைக் காட்டவில்லை.

"ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களில் அவர் திரும்பிப் பார்த்து, 'நான் வெளியே வருகிறேன், அவர்கள் என்னை அழைத்துச் செல்ல வருகிறார்கள்' என்று நகைச்சுவையாகச் சொல்வார்."

ஹூசைன் ஒரு "வெறி பிடித்த சர்வாதிகாரி" என்று சந்தேகிக்கவில்லை, அவர் குற்றம் சாட்டப்பட்ட குற்றங்களில் குற்றவாளி ஆவார். ஆனால், அவரை அறிந்தவுடன் கொடுங்கோலன் உண்மையிலேயே நல்ல நகைச்சுவையானவராக இருப்பதைக் கண்டேன் என்று கூறுகிறார் ரோஜர்சன்.

ரோஜர்சன் மேலும் கூறுகையில், "வெகுஜன படுகொலை சர்வாதிகாரி ஒரு மென்மையான பக்கத்தைக் கொண்டிருந்தார், அது வாரங்கள் செல்லச் செல்ல அவர்களுக்கு நட்பை உருவாக்க உதவியது." நாங்கள் கதைகளை வியாபாரம் செய்வோம், நாங்கள் அவரை அவரது குடும்பத்தினரைப் பார்க்க அழைத்துச் செல்வோம், அவர்கள் அவருக்கு கைக்குட்டைகளையும் இனிப்புகளையும் மிட்டாய்களையும் கொண்டு வருவார்கள்.



"அவர் எங்களுடன் மிட்டாய்கள், இனிப்புகளைப் பகிர்ந்து கொள்வார், பின்னர் நாங்கள் எங்கள் குடும்பத்தினரிடமிருந்து பெற்ற பொருட்களை அவருக்கு வழங்கத் தொடங்கினோம்."

பணியின் போது, ரோஜர்சனின் மனைவி அவருக்கு சில வாசனை மெழுகுவர்த்திகளை அனுப்பினார், சிப்பாய் அதை ஹூசைனுக்கு கொடுத்தார்.

ஜனாதிபதியாக மாறிய கைதி அதன் ஓரத்தில் அரபு மொழியில் ஒரு கவிதையை



செதுக்கி தனது மகளுக்கு பரிசாக அனுப்பினார்.

"அவர் ஒருபோதும் திமிர்பிடித்தவராகவோ அல்லது சர்வாதிகாரியாகவோ வரவில்லை, அவர் ஒரு நபர் மட்டுமே."

விசாரணைக்கு இடையில், ஹூசைன் செஸ் விளையாடுவார். தனது வானொலியில் மேற்கத்திய இசையைக் கேட்பார். ஒருநாள் மாலை ஹூசைன் தனது பொழுதுபோக்குப் பகுதியில் அமர்ந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தார், அப்போது அவர் ரோஜர்சனை அழைத்தார்.

"அவர் ஒரு புகைப்படப் புத்தகத்தை வைத்திருந்தார், அவர் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் மகிழ்ச்சியாக இருந்த இந்தப் புகைப்படங்கள் அனைத்தையும் அவருக்குக் காட்டினார். எனக்கு அது நம்பமுடியாததாக இருந்தது.

"சுருட்டு புகைக்கக் கற்றுக் கொடுத்தது காஸ்ட் ரோதான் என்று சதாம் கூறினார்." ரோஜர்சன் மீதும் மற்ற சூப்பர் பன்னிரெண்டு பேரிடமும் ஹூசைனுக்கு உண்மையான பாசம் இருந்ததா? என்பது ஒருபோதும் அறியப்படாது. ஆனால், இராணுவ வீரர்களே தங்களுக்கு எதிரியாக இருக்க வேண்டிய நபருடன் நவம்பர் 2006 இல், ஹூசைனின் விசாரணை முடிவுக்கு வந்தது, அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பல ஈராக்கியர்கள் தங்கள் முன்னாள் சர்வாதிகாரியின் கொடூரமான மரணத்தைக் கொண்டாடும் அதே வேளையில், மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு துக்கத்தில் கண்ணீர் வடிந்த சூப்பர் ட்வெல்வ் வீரர்களில் ரோஜர்சனும் ஒருவர்.

ஹூசைன் தூக்கிலிடப்பட்ட வரலாற்று நாள் பற்றி ரோஜர்சன் கூறுகிறார்: "அது உணர்ச்சிகரமானது. நாங்கள் அவர் தலைமுடியை சீவுவதையும் அவர் வேகமாக நடப்பதையும் பார்த்துக் கொண்டிருந்தோம். அன்று என்ன நடக்கப் போகிறது என்று அவருக்குத் தெரியும், பார்க்க வருத்தமாக இருந்தது.

"அவர் சோகமாகவும் வருத்தமாகவும் இருந்தார், நாங்கள் அனைவரும் வருத்தப்படுகிறோம். நான் அவரைப் பற்றி அறிந்தேன், அவருடன் என் நேரத்தைச் செலவிட்டேன், பின்னர் திடீரென்று அவர் இறக்கப் போகிறார்."

ரோஜர்சன் பின்னர் எழுத்தாளர் வில் பார்டன் வெர்ப்பரிடம் ஹூசைனின் மரணதண்டனை "ஒரு குடும்ப உறுப்பினரை இழப்பது போன்றது" என்று கூறினார். "நான் கிட்டத்தட்ட ஒரு கொலைகாரனைப் போல உணர்கிறேன், நான் நெருக்கமாக இருந்த ஒரு பையனைக் கொன்றது போல்", அவர் மேலும் கூறினார்.

ரோஜர்சன், இப்போது தனது 40 வயதில், இராணுவத்தை விட்டு வெளியேறி ஓஹியோவில் வசித்து வருகிறார், அங்கு அவர் அமெரிக்க கால்பந்து பயிற்சியாளராக பணியாற்றுகிறார். 15 வயது மகளும் ஒன்பது வயது மகனும் உள்ள இரண்டு பிள்ளைகளின் தந்தை, ஈராக்கில் இருந்து திரும்பியதில் இருந்து பிந்தைய மனஉளைச்சல் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளார். ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com
தீம்புனல் THEEMPUNAL

# மீண்டும் ஓங்கி ஒலிக்கும் சர்வதேச விசாரணை

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நடைபெற் றதாகக் கூறப்படும் சம்பவங்களை வெளிக்கொண்டுவர சர்வதேச விசாரணை தேவை என விடுக்கப்பட்ட கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் கடு மையாக மறுத்தது. உள்ளகப் பொறிமுறையில் விசாரணை செய்யப்போவ தாக அறிவித்த இலங்கை இன்றுவரை ஒரு அடிகூட முன்னுக்கு நகரவில்லை.

ஈஸ்டர் தின தொடர் தாக்குதல்கள் தொடர்பாக சனல் 4 வெளியிட்ட காணொளி இலங்கை அரசியலில் அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம் பொய் என அன்றைய ஆட்சியாளர்கள் கூறியுள்ளனர். அதேவேளை சர்வதேச விசாரணை தேவை என்ற குரலும் ஓங்கி ஒலிக்கிறது.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான சதித்திட்டம் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தங்கள் கடமையைப் புறக்கணித்த உயர் பொலிஸ் அதிகாரிகளைப் பணி இடைநீக்கம் செய்ய வேண்டும் என்றும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2019 தேர்தலில் ராஜபக்ஷவை ஆதரித்த கர்தினால் மல்கம் ரஞ்சித், தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் கோரி வருகிறார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு 310 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போதைய உளவுத்துறைத் தலைவர் நிலந்த ஜயவர்தன உள்ளிட்ட 4 அதிகாரிகளுக்கு இலங்கை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்ட ஜயவர்தன மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் தொழில்முறை அலட்சியம் காரணமாக பெயரிடப்பட்ட மற்றொரு சிரேஷ்ட அதிகாரி தேசபந்து தென்னகோன் ஆகியோரை புதிய விசாரணை முடியும் வரை சேவையில் இருந்து இடைநிறுத்துமாறு கர்தினால் தனது அறிக்கையில் வலியுறுத்தினார்.

தாக்குதல்கள் தொடர்பான பல விசாரணைகளின்படி, ஒருங்கிணைந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு 17 நாட்களுக்கு முன்னர், அண்டை நாடான இந்தியாவில் உள்ள புலனாய்வு அமைப்பு விடுத்த எச்சரிக்கைகளுக்கு இலங்கை அதிகாரிகள் செயற்படத் தவறிவிட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் ஹூசைன் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து வெளியிட்ட அறிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். அதேவேளை ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பாக சனல் 4 அம்பலப்படுத்தியமை தொடர்பில் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக அப்போதைய கர்தினால் உட்பட பெரும்பான்மையானவர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவார் என்ற நம்பிக்கையில் கோட்டபாய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வந்தனர் என்றும் தற்போது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியிலுள்ள சூத்திரதாரிகளை வெளிநாட்டு விசாரணை மூலம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் உண்மையைக் கண்டறிய இந்நாட்டு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்காமைக்கு வருந்துவதாகவும் இதற்குக் காரணமான சூத்திரதாரிகளைக் கண்டறிவதை இந்நாட்டில் செய்ய முடியாது என்றும் இது குறித்து சர்வதேச விசாரணை தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆட்சிக்கு வருவதற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பயன்படுத்தப்பட்டது என்றும் சபாநாயகர் உட்பட மொட்டின் அனைவரும் அப்போது தேர்தல் மேடைகளில் இதையே பேசினார்கள் என்றும், இன்றும் நீதி கிடைக்காததால், கர்தினால் மற்றும் கத்தோலிக்க சமூகத்தை மேலும் அவமதிக்காமல், முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச விசாரணைக்கு தமிழ் மக்கள் அழைப்பு விடுத்தபோது அதனைத் தட்டிக் கழித்தவர்கள், இன்று சர்வதேச விசாரணை தேவை என முழக்கமிடுகின்றனர். சர்வதேசத்தின் தலையீடு இல்லாமல் எதனையும் செய்ய முடியாது என்பதை சில அரசியல்வாதிகளும் ஏனையவர்களும் இப்போதுதான் புரிந்துகொண்டார்கள். ■

# தெருக்குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்



சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இலங்கையில் பிச்சைக்காரர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்த அரசாங்கம் தற்போது நட வடிக்கை எடுத்து வருகிறது. குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெண்களைப் பிச்சை எடுக்கும் தொழிலாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற கவலையால் இந்தக் கணக்கெடுப்பு தூண்டப்பட்டதாகத் தெரிகி றது. இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது என்றாலும் அதிகாரிகள் ஏன் ஏற்கெனவே நிலைமையை கவனிக்கவில்லை என்று கேட்க வேண்டும், குறிப்பாக குழந்தைகள் தொடர்பாக. இந்த வாரம் பாராளுமன்றக் குழுவில் உரையாற்றிய பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, சிறுவர்களும் பெண்களும் பிச்சையெடுப்பில் அதிகள வில் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

பொலிஸ், உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இராஜாங்க அமைச்சர் பூர்வாங்க கலந்துரையாடல்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சாலையோரங்களில், பாதிக்கப்படக்கூடிய நபர்கள் 'பயன்படுத்தப்படுவதை' அல்லது பிச்சை எடுப்பதில் பங்கேற்பதைக் கவனிக்க, மாநில அதிகாரிகளும், பொறுப்பு அமைச்சரும் இவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது, குழந்தைகள் நலன் மற்றும் முதியோர்கள் என்ன என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இலங்கையில் பராமரிப்பு முறை குறைவாக உள்ளது.

தெருவோரத்தில் பிச்சை எடுக்கும் பழக்கத்தைக் கண்டும் காணாத பலரைப் போல, பிச்சைக்காரர்கள் போக்குவரத்து பிரச்சினையாக மாறும் போதும் பிச்சை எடுப்பது பொதுமக்களுக்கு இடையூறாக மாறுவது குறித்து புகார்கள் வரும்போதும் அதிகாரிகள் மட்டுமே கவனம் செலுத்துகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

கடந்த காலத்தில் மக்கள் நலன் மற்றும் சட்ட அமுலாக்க அமைப்பு இப்படித்தான் செயற்பட்டது. அதுபோல, பிச்சைக்காரர்களைப் பயன்படுத்தி தர்மம் செய்யும் 'தொழில்' இருக்கலாம் என்ற வாதம் விசாரிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கலாம். காவல்துறையும் மற்ற அதிகாரிகளும் ஏன் இந்த விவகாரத்தை இது வரை கண்டுகொள்ளவில்லை என்பது விடை தெரியாத கேள்வியாகவே உள்ளது.

குறிப்பாக குழந்தைகளின் ஈடுபாடு காரணமாக, பாதுகாக்கவும் வளர்க்கவும் மாநிலத்திற்கு சிறப்புப் பொறுப்பு உள்ளது. பாதிக்கப்படக்கூடிய நபர்களை பல்வேறு தரப்பினர் சுரண்டுவது இலங்கை சமூகம் புதிதல்ல, அத்தகைய நீண்ட மற்றும் இருண்ட பதிவு உள்ளது.

இதுபோன்ற குழந்தைகள் மற்றும் பெண்களின் நலனை விசாரிப்பதே பல ஏஜென்சிகள் மற்றும் பொலிஸ் பிரிவுகள் உள்ளன. அது நடக்கவில்லை என்பது தற்போதைய நடைமுறையை மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

கடந்த மூன்று வருடங்கள் குறிப்பாக இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மீது கடுமையாக நடந்து கொண்டிருக்கின்றன. COVID 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து வறுமை மற்றும் வேலையின்மையை எதிர்கொள்பவர்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருப்பதாக சமீபத்திய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

வாழ்க்கைச் செலவில் விலை அதிகரிப்புடன், பல பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மோசமாக உள்ளன. பலர் வீடற்றவர்களாகவும் வேலையற்றவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர், இதனால் வீதிக்கு வரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவிப் பொதியின் தொடக்கத்துடன், ஐக்கிய நாடுகள் சபை, முக்கிய கடன் வழங்குநர்கள் மற்றும் அதிகாரிகள் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை விரிவுபடுத்துவது ஒரு முக்கிய முன்னுரிமை என்று வலியுறுத்தியது. எனினும், புதிய சமூக நல அமைப்பு, அஸ்வசும மற்றும் மரபு முறையான சமுர்த்தி இன்னும் சமாந்தரமாகச் செயற்படுகின்ற போதும் பின்தங்கியவர்கள் பலர் உள்ளனர்.

அந்த மாதிரி பிச்சை எடுப்பதற்கான 'கருவிகளாக' பயன்படுத்தப்படும் குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெண்களைப் பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலுக்கு அகற்றுவதும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதும் முக்கியம் என்றாலும் நீண்டகால வேலைத்திட்டம் மற்றும் ஆதரவு அமைப்பும் இருக்க வேண்டும்.

ஏழையாக இருப்பது குற்றம் அல்ல, எனவே புரிதலும் ஆதரவும் தேவை. அவர்களைச் சுரண்டுபவர்கள், சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்ள வேண்டும். வீடற்ற சமூகம் மற்றும் தொண்டு தேடுபவர்களுக்கு உதவ, அவர்களின் சூழ்நிலைகளைவிட சிறந்த வாழ்க்கை முறைக்கு உயர, அடிமட்ட சிவில் மற்றும் சமூகக் குழுக்களின் உதவியுடன் இருக்கலாம். ■



கருணாகரன்

# பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்றுப் பொக்கிஷங்கள்

புலம்பெயர் மக்களின் உதவிகள் தொடர்பில் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகிறோம். அப்படிச் செய்யவேண்டிய கடமை நமக்குள்ளது. ஏனென்றால், அவர்களுடைய பணிகளும் மனப்பாங்கும் சிந்தனையும் வரலாற்றில் பதியப்பட வேண்டியது. அப்படி வரலாற்றில் பதிவதற்கான வரலாற்றுப் பெறுமானம் அதற்குண்டு.

நாட்டை விட்டு, பிறந்த மண்ணை விட்டுப் பெயர்ந்து சென்றாலும் அவர்களுடைய இதயமும் மூளையும் தாம் பிறந்த மண்ணைப் பற்றியும் தமது தாய் நாட்டைப் பற்றியுமே சிந்தித்தபடி உள்ளன. இதில் சாதக பாதக நிலைகளும் உண்டு.

ஊர் வழக்கம், மரபு போன்ற காலத்துக்கும் பொது வாழ்வுக்கும் அறத்துக்கும் பொருந்தாத சாதி, பிரதேச வேறுபாடு போன்ற விடயங்களைக் காவிக் கொண்டிருப்பது அதில் ஒன்று. (இதற்கப்பால் பொருந்தக் கூடிய வழமைகளை ஏற்பதும் தொடர்வதும் வேறு). பொருந்தாத அரசியல் சிந்தனைகளை மறுபரிசீலனையின்றித் தொடர்வது, நடைமுறைச் சாத்தியங்களே இல்லாத அதீத கற்பனையுடன் செயற்பட முனைவது, ஜனநாயக மறுப்பில் ஈடுபடுவது போன்றன இன்னொன்று.



இதைக் கடந்து தாய்நாட்டுக்காக எதையாவது செய்ய வேண்டும், பிறந்த மண்ணுக்கும் தம்முடன் கூடி வாழ்ந்த மக்களுக்கும் வழி காட்ட வேண்டும், உதவ வேண்டும் என்று சிந்திப்பது போற்றுதற்குரியது. இந்த வகையில் பல்வேறு உதவிகள், வேலைத்திட்டங்கள், முதலீடுகள் போன்றவற்றைப் பலரும் செய்து வருகிறார்கள். அவற்றைக் கவனப்படுத்தி பொது உரையாடலுக்கும் பொதுக் கவனத்துக்கும் கொண்டு வரவேண்டியதும் அவசியம். அப்படிச் செய்யும் போது அது பெருங்கவனத்துக்கும் வரலாற்றுப் பதிவுக்கும் உரியதாக மாறும். நல்விளைவுகளும் அதனால் நிகழும்.

புலம்பெயர்வு என்பது முன்னர் ஒரு போதும் இந்தளவுக்கு ஈழத்தமிழ்ச் சமூகத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் நிகழ்ந்திருக்கவில்லை. பொருள் தேடிப் பிறதேசம் செல்வது முன்னரும் நிகழ்ந்தது. சிங்கப்பூர், மலேசியா மற்றும் நைஜீரியா, சாம்பியா போன்ற ஆபிரிக்க நாடுகளுக்கு உத்தியோகத்திற்காகவோ வர்த்தகத்திற்காகவோ ஈழத் தமிழர்கள் சென்றிருக்கிறார்கள். அதைப் புலம்பெயர்வாக அவர்களும் உணர்ந்ததில்லை. அப்படியான அர்த்தம் இதற்கு ஏற்பட்டதும் இல்லை.

ஆனால், 1970 இன் இறுதிப் பகுதியிலும் 1980 களின் முற்பகுதியிலும் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் காரணமாக நிகழ்ந்த புலப்பெயர்வே "புலம்பெயர்வு" என அடையாளப்படுகிறது. இந்தப் புலம்பெயர்வு பல பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்தியது. அரசியல் பிரக்ஞை, வரலாற்றுணர்வு, இதன் நிமித்தமாக எழுந்த கலை, இலக்கியச் செயற்பாடுகள், அடுத்த கட்டமாக தாம் வாழும் தேசங்களில் கட்டமைப்பாகுதல், அங்கிருந்து தாய் நாட்டுக்காகச் செயற்படுதல் என இது விரியத் தொடங்கியது. (இதைப்பற்றி விரிவாக எழுத வேண்டும்).



இப்படிப் பல்பரிமாணங்களில் செயலாற்றத் தொடங்கிய புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்புகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதேசங்களையும் மீள் நிலைப்படுத்தவும் புதிதாகக் கட்டியெழுப்பவும் உதவுகின்றன. இவற்றினால்தான் இவற்றுக்கு வரலாற்றுப் பெறுமானம் உண்டென்கிறோம்.

இந்த வகையில் மேலும் ஒரு புதிய அடையாளமாக புலம்பெயர் மக்களின் செயற்பாட்டில் உருவாகியுள்ளது அச்சுவேலி - இடைக்காட்டில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தடாகம் (கேணி). இதற்கான காணியை ஒதுக்கி சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த நீர்த்தடாகத்துடன் இணைந்ததாக ஆவுரைஞ்சிக் கல், சுமைதாங்கி, மரத்தோப்பு என்பனவும் உண்டு. இவற்றை அமைத்திருப்பவர் இடைக்காட்டில் பிறந்து தற்போது லண்டனில் வசிக்கும் நடராஜா உதயகுமார் என்பவர்.

இவர் இது மட்டுமன்றி ஊரின் நினைவையும் அடையாளங்களையும் பிரதிபலிக்கும் வகையிலான ஒளிப்பதிவுடன் கூடிய வரலாற்றுத் தகவல் ஆவணமொன்றையும் நூலாக்கி வருகிறார். வரலாற்று அடையாளங்கள் சிதைக்கப்பட்டு வரும் அரசியல் மேலாதிக்க ஒடுக்குமுறைச் சூழலில் இத்தகைய அரும்பணிகள் முன்னுதாரணமாகக் கொள்ளப்பட வேண்டியவை. மேலும் கவனித்து ஊக்கமளிக்கப்பட வேண்டியவையாகும்.



தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகச் சிறப்பித்துக் கூறப்படும் ஆநிரைகளுக்கான நீர்த்தடாகம் மனிதப்பண்பாட்டின் சிறப்புகளில் முக்கியமானது. தமக்கு மட்டுமன்றி, தாம் வளர்க்கின்ற பிராணிகளுக்கும் அயற்சூழலில் உள்ள வேறு விலங்கினங்களுக்கும் நீரை அளிக்கின்ற பண்பாடு தமிழ் மரபில் உள்ள ஒன்று. அதனோடு இணைந்ததாக ஆநிரைகள் தமது உடல் உபாதைகளை தீர்த்துக் கொள்வதற்காக ஆவுரஞ்சிக் கல்லும் அமைக்கப்படுவதுண்டு. இப்போது இந்தக் கேணியிலும் அவ்வாறான ஆவுரஞ்சிக் கல் கேணியின் அருகே இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்னொரு அம்சமான சுமைதாங்கியும் அமைக்கப்பட்டிருக்கிறது. இவற்றோடு ஆநிரைகளும் மக்களும் இருக்கும் வகையில் மரங்கள் நாட்டப்பட்டு உள்ளன. ஆல் போன்ற பெருவிருட்சங்களோடு பலா, மா போன்ற பயன்தரு மரங்களும் நட்டுப் பராமரிக்கப்படுகிறது.

இப்போது சுமைதாங்கிக்கான அவசியமோ அதற்கான வாழ்க்கை அமைப்போ இல்லாதிருக்கலாம். ஆனால், முன்னர் இருந்த ஒரு வாழ்க்கை வரலாற்று அடையாளத்தை இன்றைய இளைய சமூகத்தினருக்கு உணர்த்தவும் அறிய வைக்கவும் இது உதவுகிறது.

முன்பு இத்தகைய கேணி, ஆவுரஞ்சிக் கல், சுமைதாங்கி என்ற அமைப்பு ஊர்கள் தோறும் இருந்தன. யுத்தமும் கால மாற்றமும் அவற்றைக் கைவிட்டு விட்டன, அல்லது அழித்து விட்டன. இதனால் புதிய தலைமுறைக்கு இவை இன்று புதியவையே!

இவ்வாறான வேலைகளை விடவும் இந்த நிதியைப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கு செலவிட்டிருக்க முடியும் எனச் சிலர் அபிப்பிராயப்படலாம், அல்லது பிரதேச அபிவிருத்திச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் அவர்கள் கருதலாம். இவையும் சமூக அபிவிருத்தியோடு இணைந்தவையே. கால்நடை வளர்ப்பும் அதன் அபிவிருத்தியும் இதில் ஒன்று. எனவே, இதை மனங்கொண்டு உதயகுமார் செயலாற்றியிருப்பது சிறப்பு, பாராட்டப்பட வேண்டியது.

இவ்வாறான பன்முகப்பட்ட உதவிகள், செயற்பாடுகள்தான் ஒட்டுமொத்த சமூக வளர்ச்சிக்கு சாத்தியங்களை வழங்கும். இவற்றை ஆதரித்து ஊக்கப்படுத்த வேண்டியது மக்களின் கடமையாகும். அத்துடன் இந்த உதவிகளையும் செயல்பாடுகளையும் பயனுள்ள வகையில் பராமரிப்புச் செய்து பயன்பெற வேண்டியது மக்களின் கடமையாகும்.

புலம்பெயர் சமூகத்தின் பல்பரிமாணப் பங்களிப்புகளை முறையாக வழிப்படுத்த வேண்டும் என்ற கருத்து தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டுரையாளரும் அதனைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார். நமது அரசியல் தலைமைகளும் சமூக, பொருளாதார அறிஞர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களும் இதற்கு இனியேனும் முயற்சிக்க வேண்டும். போனவை போகட்டும், இனியாவது உரிய வழிகளில் பயன் பொருத்தமாக செயற்படுவோம்.

அணிகள், குழுக்களாக பிளவுண்டு, முரண்பட்டு மேலும் பின்னடைவுகளையும் சேதங்களையும் உண்டாக்குவது நல்லதல்ல. உதவும் கரங்களும் மனங்களும் நமது சமூகத்திடம் தாராளமாக உண்டு. அதை நல்லமுறையில் பயன்படுத்தத் தெரியாதிருக்கிறோம். போராட்டத்தில் பிளவுண்டு அடைந்த சேதங்களும் பின்னடைவும் நமக்கு இன்னும் பாடங்களைப் புகட்டவில்லையா? ■

# ஜனாதிபதி ரணிலுக்கு காத்திருக்கும் சவால்கள்

எம்.ஏ.எம்.நிலாம்



ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்திலும் ஜி77 மாநாட்டிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன சொல்லப் போகிறார்? என்பதை சர்வதேசம் மிகத் அவதானமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் உள்ளக விவகாரம் மட்டுமல்லாது சர்வதேசப் பார்வையும் உள்வாங்கியதாகவே ஜனாதிபதியின் உரை அமையலாம் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பாகும். நாட்டின் பொருளாதார நெருக்கடியை மையப்படுத்தியதாகவே ரணிலின் உரையும் சர்வதேசத்துடனான சந்திப்புக்களின் போதும் அமையலாம் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 13 ஆம் திகதி தனது பயணத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் கியூபாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். ஹவானாவில் எதிர்வரும் 15 ஆம் திகதியும் 16 ஆம் திகதியும் நடைபெறவிருக்கும் ஜி77 மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார். ஜி77 இல் 134 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. சர்வதேசம் எதிர் கொண்டுள்ள பொருளாதாரச் சவால்கள் குறித்து அந்த நாடுகளின் பிரதிநிதிகளுடன் விரிவாகக் கலந்துரையாடவிருப்பதாகவும் அவற்றுக்குத் தீர்ப்புகளைத் தேடுவதில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்துவார் எனவும் நம்பப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி இன்று அனைத்து நாடுகளையும் சவாலுக்குட்படுத்தி வரும் நிலையில் வறுமைக்குள் சிக்கியிருக்கும் நாடுகள் பாரிய சிக்கலை எதிர்கொண்டுள்ளன. இந்த நாடுகள் சர்வதேசத்திடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால் மேற்குலகத்திடம் சிக்கித் தடுமாறிக் கொண்டிருப்பதை வெளிப்படையாகவே காண முடிகிறது. இந்தப் பேரவலத்திலிருந்து வறிய நாடுகள் மீட்சி பெற முடியாத நிலையால் உலகமே தடுமாறிக் கொண்டிருக்கின்றது. வறிய நாடுகளின் நிதிச் செயற்பாடுகள் முடங்கிப் போயிருப்பதால் அந்த நாடுகள் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியாதுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகள்கூட இன்று பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறானதொரு நிலைமையில்தான் ஜி77 நாடுகளின் தலைவர்களுடனும் பொருளாதார நிபுணர்களுடனும் உத்தியோகபூர்வமான பேச்சுக்களை முன்னெடுக்கவும் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கின்றார். ஜி77 மாநாட்டின் கருப்பொருள்கூட இதற்கமைவாகவே அமையப்பெற்றுள்ளது. வெறுமனே தீர்மானங்களை எட்டிவிட்டால் மட்டும் போதாது. அவை செயலுருப் பெறுவதை மாநாடு உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்துவார் எனக் கூறப்படுகின்றது. காலநிலைகளுக்கு ஒத்திசைவாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் மாநாட்டில் சுட்டிக் காட்டப்படவுள்ளது. இன்று காலநிலை மாற்றம்கூட சவாலாகவே காணப்படுகின்றது.

ஜி77 மாநாட்டை அடுத்து ஐ.நாவின் 78 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி நியூயோர்க் பயணமாவார். இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தொடர் இம்மாதம் 18 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஐ.நா தலைமையகத்தில் நடைபெறும் மாநாட்டுக்கான நிகழ்ச்சி நிரல் பொதுச் சபையின் பேச்சாளரால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21 ஆம் திகதி ஐ.நா பொதுச் சபையில் உரையாற்றவுள்ளார். ஜனாதிபதி ரணிலின் உரையை சர்வதேச நாடுகள் ஆர்வமாக எதிர்பார்த்திருப்பதாக ஐ.நா பொதுச்சபை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன நீண்டதொரு இடைவெளிக்குப் பின்னர் இலங்கை ஜனாதிபதி ஐ.நா பொதுச் சபையில் உரையாற்றவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் இம்முறை உலக அரசியல் தலைவர்கள் பலரும் இளம் தலைவர்களும் பங்கேற்க இருப்பது முக்கியமானதாகும். இம்முறை பொதுச் சபைக் கூட்டத் தொடரின் பிரதான கருவாக ‘நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அபிவிருத்திக்கான நிதிச் செயற்பாடுகள் குறித்தும் கவனத்தில் கொள்ளப்படவுள்ளது. சவால்களை வெற்றிகொண்டு அபிவிருத்திப் பாதையை சீரமைத்துப் பயணிக்க வேண்டிய முக்கியத்துவம் அமையப் பெற்றுள்ளது.

அத்துடன் 2030 ஆம் ஆண்டை நோக்கிய நிகழ்ச்சி நிரலின் மீதான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் மற்றும் அமைதியை நோக்கி நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான திட்டங்கள் மற்றும் உலகக் காலநிலை மாற்றம் தொடர்பிலான விவகாரங்களும் கலந்துரையாடப்படவுள்ளன. காலநிலை மாற்றம் குறித்து பொதுச் சபையில் விரிவாக ஆராயப்படுவதற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உலக நாடுகளில் காணப்படும் காலநிலை மாற்றம் சவாலுக்குட்படுத்தப்பட்டிருப்பதால் அதனை ஆரோக்கியமான திசைக்கு மாற்றுவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த காலகட்டத்தில் கடந்த வருடம் ஜூலை மாதத்தில் நாட்டை மீட்டெடுப்பதற்கான பெரும் பொறுப்பை தன் தலையில் சுமந்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டார். இது ஒரு ‘மலர்ப்படுக்கையில் முட்கள் நிறைந்த காடு’ என்பதை அவர் நன்கறிந்த நிலையிலும் பெரும் மனத் தைரியத்துடன் தனது பயணத்தை ஆரம்பித்தார். நாட்டை எந்த வகையிலேனும் மீட்டெடுக்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் தனது வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பித்தார். அதன் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வதற்காக பேச்சுக்களும் சந்திப்புக்களும் தொடராக முன்னெடுக்கப்பட்டன. இதனடிப்படையில் கடன்களை மீளச் செலுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியம் அதன் சலுகைக் காலத்தை நீடிக்க இணங்கியது. இது ஆரோக்கியமான ஒத்துழைப்பாகவே காணப்படுகிறது. இது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதையில் தடம் பதிக்க வழிவகுத்தது எனலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார மீட்சித் திட்டங்கள் நம்பிக்கை தரும் விதத்தில் ஓரளவு பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கியது. அதன் காரணமாக பொருளாதார நெருக்கடி காலத்தில் நிலவிய பணவீக்கம் ரூபாவில் பெறுமதி வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறுபட்ட அசௌகரியங்களை கட்டம் கட்டமாக நீங்குவதற்கான வழி பிறந்தது. இன்று ஓரளவு அந்நியச் செலாவணி கையிருப்பிலும் வைத்திருக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் நாடு நம்பிக்கையுடன் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ற வகையிலான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க உறுதி பூண்டிருக்கின்றார். பொருளாதார அபிவிருத்தியின் பக்கம் தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் போன்ற நாடுகள் பின்பற்றிய பாதையில் இலங்கையும் பயணிப்பதற்கான வேலைத்திட்டத்தை கையாளுவதற்கு கவனம் செலுத்துகிறது. உண்மையிலேயே இது வரவேற்கத்தக்கதாகும்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் நிபுணர்கள் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் எமது கவனத்தை ஈர்த்துள்ளது. “நாம் தொடர்ந்தும் சிறிய பொருளாதாரத்தின் பக்கம் கவனம் செலுத்துவதைவிட எமது பொருளாதாரத்தை விஸ்தரிப்பதற்கான புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் இதற்குத் தேவையான வெளிநாட்டு முதலீடுகளையும் மூலதனத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இனிமேலும் நாம் வெளிநாடுகளுக்கு சுமையாக இருக்க முடியாது என குறிப்பிட்டிருக்கின்றார்.

நாடு தொடர்ந்தும் வெளிநாடுகளின் உதவியில் தங்கியிருக்க முடியாது. நமது நாட்டின் முன்னேற்றத்தை நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான செழிப்பான வளம் எமது நாட்டில் தாராளமாகவே காணப்படுகின்றது. அவற்றை சரியாகவும் முழுமையாகவும் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியம் உயர்ந்த பொருளாதார வளர்ச்சிப் பிராந்தியமாக மாற்றமடைய வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். வாய்ப்புகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள

**(21 ஆம் பக்கம் பார்க்க...)**

# தலைவர்களை புறம் தள்ளி தமிழ் மக்கள் தெளிவடைய வேண்டும்



தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

மூல (அசல்) 13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்களை, அப்போதிருந்த முதலாவது (இறுதியும்கூட) இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் ஆட்சியதிகாரம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் வசமிருந்த காரணத்தால் (ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஐச் சேர்ந்த அ.வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்தார்) பிரயோகிப்பதைத் தடுக்கும் வகையில் அப்போது (பிரேமதாச +பிரபாகரன் கூட்டின் போது) தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 1990 ஆம் ஆண் டின் முதலாம் இலக்கப் பொலிஸ் ஆணைக் குழுச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிச் செயற்பட்டார்.

அதாவது, இந்த 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பொலிஸ் ஆணைக் குழுச் சட்டத்தைப் பாவித்து 13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ்



அதிகார ஏற்பாடுகள் அமுலுக்கு வரும் திகதியை வர்த்தமானியில் பிரசுரிக்காமல் (விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று) காலத்தை வேண்டுமென்றே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச இழுத்தடித்தார். அதனால் அவரது பதவிக் காலத்தில் 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவோ (மத்திய அரசு) மாகாண பொலிஸ் ஆணைக்குழுவோ நியமிக்கப்படவேயில்லை. அதனால் பகிர்ந்தளிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்களைத்தானும் மாகாண சபைகளால் பிரயோகிக்க முடியவில்லை. இதற்குக் காரணமாயிருந்தவர்கள் தமிழர் தரப்பே (தமிழீழ விடுதலைப் புலிகளே) என்பதையும் பார்த்தோம்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் அகால மரணத்தின் பின்னர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற டி.பி.விஜயதுங்க காலத்திலும் (1991-1994 அதுவே தொடர்கதையானது. 1994 இலிருந்து 2000 வரையிலான காலப் பகுதியில் ஜனாதிபதியாக சந்திரிக்கா இருந்த போதும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஆனால், அதற்குப் பின்னர் இரண்டாவது தடவையாகவும் 2000 ஆம் ஆண்டு சந்திரிக்கா ஜனாதிபதியாக வந்த போது, 17 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி அரசியலமைப்புப் பேரவையை (CONSTITUTIONAL COUNCIL) நிறுவி அதன் மூலம் பல சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்த போது தேசிய பொலிஸ் ஆணைக் குழுவையும் முதல் முறையாக நியமித்தார். ஆனால் மாகாண பொலிஸ் ஆணைக்குழு நிறுவப்படவில்லை. பதிலாக மாகாண மட்டத்தில் 'குழு'க்களை (COMMITTEES) நியமிப்பதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மாகாண மட்டத்தில் பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு அதிகாரமும் அக்குழுக்களுக்கு இருந்தது. ஆனால், யுத்தம் அப்போது தீவிரமாக நடந்து கொண்டிருந்த காரணத்தால் அத்தகைய மாகாண மட்டக் 'குழு'க்கள் நியமிக்கப்படவேயில்லை. ஜனாதிபதி சந்திரிக்காவின் நல்லெண்ணத்தையோ, தாராள மனப்போக்கையோ அப்போதிருந்த தமிழ்த் தேசிய அரசியல் தலைமை பயன்படுத்தத் தவறியதும் இதற்குக் காரணம். தமிழ்த் தேசிய அரசியல் பயணம் முழுவதும் சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறியமையே 'வைக்கோல் இழுத்த வழிப்பாடு' ஆக வரலாற்றில் பதிந்து கிடக்கிறது. தமிழ் மக்களின் கடந்த கால அரசியல் மற்றும் இராணுவ சக்திகளின் மக்கள் நலனைப் புறந்தள்ளிய தன்னலமும் தன் முனைப்புமே இதற்குக் காரணம். தமிழர் தம் அரசியல் தலைமை அறிவுபூர்வமான அரசியலை முன்னெடுத்திருந்தால் ஜனாதிபதி சந்திரிக்காவின் காலத்திலேயே குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தைத்தானும் தமிழர்கள் திருப்திப்படும் வகையில் முழுமையாக அமுல் செய்திருக்க முடியும்.

சந்திரிக்காவுக்குப் பின் மஹிந்த ராஜபக்ஷ 2005 இல் ஜனாதிபதியாக வந்து 18 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி அரசியலமைப்புப் பேரவைக்குப் பதிலாக பாராளுமன்றப் பேரவையை (PARLIAMENTARY COUNCIL) உருவாக்கி தேசிய பொலிஸ் ஆணைக் குழு உட்பட சகல சுயாதீன குழுக்களினதும் கட்டுப்பாட்டைத் தனது நிறைவேற்று அதிகாரத்திற்குள் கொணர்ந்ததன் மூலம் 17 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தில் அடங்கியிருந்த, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மாகாண மட்டத்தில் 'குழு'க்களை நியமிக்கும் அதிகார ஏற்பாட்டையும் நடைமுறையில் இல்லாமலாக்கினார்.

ஆனாலும், மைத்திரிபால சிறிசேன 2015 இல் ஜனாதிபதியாகி நிறைவேற்றிய 19 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் மாகாண மட்டத்தில் குழுக்களை நியமிக்கும் அதிகாரம் மீண்டும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டு அது கோட்டபாய காலத்தில் நிறைவேறிய 20 ஆவது திருத்தத்திலும் ரணில் ஜனாதிபதியாக வந்த பின்னரான 21 ஆவது திருத்தத்திலும் தொடர்ந்து பேணப்பட்டது. அதாவது, அந்த ஏற்பாடு செயற்படுத்தப்படவில்லையே தவிர சட்டத்தில் இப்போதும் உள்ளது.

இந்த 17, 18, 19, 20 ஆவது மற்றும் 21 ஆவது திருத்தங்களைப் பற்றிய தெரிதலோ, புரிதலோ இல்லாத 'தமிழ்த் தேசிய'த் தரப்பினர்தான் 1990 ஆம் ஆண்டு பிரேமதாச நிறைவேற்றிய 1 ஆம் இலக்கப் பொலிஸ் ஆணைக்குழுச் சட்டத்தை மேற்கோள்காட்டி (17 ஆவது திருத்தத்தின் பின் 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டம் செயல் இழந்து விட்டது) தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு திகதியைத் தீர்மானித்து வர்த்தமானி அறிவித்தலைச் செய்வதால் மாகாண பொலிஸ் முறைமை (ஆணைக்குழு) நடைமுறைக்கு வந்து விடுமென அரசியலமைப்பு ரீதியாக நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றைக் கூறிக் குழப்புகின்றனர். 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பொலிஸ் ஆணைக் குழுச் சட்டம் உருவாவதற்குக் காரணமாயிருந்து பின்னர் அச்சட்டம் நடைமுறையில் இருந்த காலத்திலும் (2000 வரை) வாய்மூடி இருந்து அதற்குப் பின்னரும் 17, 18, 19, 20, 21 ஆவது திருத்தங்கள் நிறைவேற்றப்பட்ட வேளைகளில் (சுமார் 33 ஆண்டுகள்) மௌனமாயிருந்து விட்டுத்தான் 'போலி'த் தமிழ்த் தேசியவாதிகள் கூட்டம் இப்போது திடீரெனக் கண் விழித்துப் பொலிஸ் அதிகாரங்கள் பற்றிப் புலம்புகின்றது.

இந்தப் 'போலி'த் தமிழ்த் தேசிய வாதிகள் அடிக்கும் 'கூத்து'கள் ஒருபுறம் இருக்கட்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு விதிகளின்படி தேசிய பொலிஸ் ஆணைக் குழுவானது மாகாண மட்டத்தில் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்) 'குழு'க்களை நியமித்து அவற்றின் மூலம் பொலிஸ் சேவைக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆட்சேர்ப்புச் செய்ய முடியும்.

அதனால்தான் 'அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம்' 08.05.2023 அன்று ஜனாதிபதியிடம் கையளித்த 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யும் ஆலோசனைகள் அடங்கிய வழிவரைபட ஆவணத்தில் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் உடனடியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுவதற்காகத் தமிழர்களிடமிருந்து பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும்படியான கோரிக்கையையும் உள்ளடக்கியிருந்தது. **(20 ஆம் பக்கம் பார்க்க...)**

# தம்பிலுவிலில் கொம்புமுறி விளையாட்டு

தம்பிலுவில் கிராமத்தில் பாரம்பரியக் கலைகளுள் ஒன்றான கொம்பு முறி விளையாட்டு (26)சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கண்ணகியம்மன் ஆலய முன்றலில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. எட்டு நாட்கள் வடசேரி, தென்சேரி குடிகளினால் விளையாட்டு இடம்பெறுகின்றமை வழக்கம்.

கடும் வறட்சியிலிருந்து நாட்டை பாதுகாத்து மழை பெய்ய வேண்டும் என்றும் நாடு செழிக்க வேண்டும் என்றும் துன்பங்கள் ஒழிய வேண்டும் என்றும் இறைவனிடம் வேண்டி வருடம் தோறும் அம்பாறை மாவட்டத்தின் தம்பிலுவில் கிராம மக்கள் இந்த வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரசித்தி பெற்ற தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலய வீதியில் மழை வேண்டி முன்னெடுக்கும் கொம்புமுறி விளையாட்டு வழிபாடும் கண்ணகி அம்மனை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படுகிறது. அம்மை கொப்பளிப்பான், கண் நோய் போன்ற நோய்களை அம்மன் கோதாரி என்று அழைப்பது தம்பிலுவில் பிரதேச வழக்கம். அதிகமான காலத்திலேயே இந்த நோய்கள் அதிகம் பரவுவதாலும் மஞ்சளும் வேப்பிலையாலும் கண்ணகி அம்மனுக்கு விழா நடத்தினால் அம்மன் மகிழ்ச்சி உற்று மழை பொழியும் எனவும் நோய்கள் குறையும் எனவும் மக்கள் நம்புகின்றனர்.

இந்த நிலையில் 8 நாள் விளையாட்டில் தொடர்ச்சியாக 7 நாட்கள் தென்சேரி குடி வென்றது இதன்போது கண்ணகி அம்மன் காவியம் பாடி அவர்களுடைய ஆராதனை தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் பொலிஸ்தின விழா

பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது தினத்தையிட்டு மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பிரித் ஓதி விசேட வழிபாடு கடந்தவாரம் நடைபெற்றது.

மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பகுதி மின்சார விளக்குகளால் சோடிக்கப்பட்டு பிரித் ஓதும் விசேட வழிபாடு மட்டு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி.எம்.



பி.ஆர்பண்டார தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இதில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல். ஏ.எதிரமான, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எம்.ஏ.கே பண்டார மற்றும் 14 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட பொலிஸார் கலந்து கொண்டனர்.

இதில் மட்டு மங்களராம விகாரையின் பிரதம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரர் தலைமையிலான தேரர்களை பூஜை தட்டுக்களுடன் அழைத்து வரப்பட்டு பிரித் ஓத அமைக்கப்பட்ட விசேட வழிபாட்டு கொட்டகையில் விசேட பிரித் ஓதும் வழிபாடு இடம்பெற்றது.

# நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் மீது நடவடிக்கை

எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய ஒரேயொரு மயக்க மருந்து நிபுணர் முன் அறிவித்தல் இன்றி வைத்தியசாலையை விட்டு வெளியேறிய சம்பவத்தை அடுத்து, முன்னறிவிப்பின்றி வெளிநாடு செல்லும் வைத்தியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்) டொக்டர் ஜி.விஜேசூரிய இதனைத் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் முன் அனுமதியின்றி மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதி இல்லை. தற்போதைய சூழலில், மருத்துவர்கள் பல காரணங்களைக் கூறி நாட்டை விட்டு வெளியேறும் போக்கு அதிகரித்து வருவதை நாங்கள் அவதானித்துள்ளோம். எவ்வாறாயினும், முன்னறிவிப்பின்றி ஒரு மருத்துவர் நாட்டை விட்டு வெளியேறினால், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன என வைத்தியர் விஜேசூரிய தெரிவித்தார்.

# கனிய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

திருகோணமலை - புல்மோட்டை தொடக்கம் நிலாவெளி வரையான கடற்கரைப் பகுதிகளில் புவி சத்திரவியல் சுரங்க திணைக்களத் தலைவரின் தன்னிச்சையான ஒப்பந்தத்தின் மூலம் கனிய மணல் அகழ்வதற்கான ஆராய்வு செய்வதற்கான அளவீடு நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு கோரியே கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.




இதில் பிரதேச வாசிகள், சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்தொழில் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு தங்களின் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

இதன்போது, “அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே”, “சுரண்டாதே சுரண்டாதே மக்களின் வாழ்வாதாரத்தை சுரண்டாதே”, “நிறுத்து நிறுத்து GSMB தலைவரின் தன்னிச்சையான முடிவை நிறுத்து”, “அழிக்காதே அழிக்காதே சுற்றுலாத்துறையை அழிக்காதே”, “மண் அகழ்வு ஒப்பந்தத்தை உடன் நிறுத்து” என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு விஜயம் செய்த குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதனிடம் குறித்த விடயத்தை நாட்டின் ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு கோரிய மகஜரினை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்து வைத்தனர்.

# வாரந்தோறும் மூன்று விமானங்களை இயக்கவுள்ளது ஏர் அரேபியா அபுதாபி

எமிராட்டியின் குறைந்த கட்டண விமான சேவையான ஏர் அரேபியா அடுத்த ஆண்டு முதல் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இலங்கைக்கும் இடையே வாராந்திர மூன்று விமானங்களை இயக்குவதாக அறிவித்துள்ளது.




அபுதாபி சர்வதேச விமான நிலையத்திற்கும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் இடையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 03 ஆம் திகதி விமானச் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பாதையின் சேர்க்கையானது கேரியரின் 34 ஆவது இலக்காகும்.

# IMF பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை நேற்று பாராளுமன்றத்தில் சந்தித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்திற்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடுவதே இந்தச் சந்திப்பின் நோக்கமாகும்.

இந்தச் சந்திப்பின் போது, சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் முன்னேற்றத்தை மதிப்பிடுவது மற்றும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய உடனடி பணிகளை அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்தார்.

பிரேமதாச அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் சமமான சிகிச்சையை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார் மற்றும் ஆபத்தில் உள்ள குழுக்களுக்கான கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

# புதிய “கல்விப் பல்கலைக்கழகம்” நிறுவப்படும்



இலங்கையில் உள்ள ஆசிரியர் பயிற்சியாளர்கள் அடுத்த ஆண்டு தேசியக் கல்விக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள், மாறாக நாட்டிலுள்ள அனைத்து தேசியக் கல்விக் கல்லூரிகளையும் இணைக்கும் உத்தேச இலங்கை கல்விப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுவார்கள்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) படி, 2027 ஆம் ஆண்டுக்குள் இளங்கலை கல்விப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக பல்கலைக்கழகத்தை நிறுவுவதே இதன் நோக்கமாகும்.

பல்கலைக்கழகத்திற்கான கருத்துரு ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், விரிவான அமைச்சரவை பத்திரம் அடுத்த வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்படும்.

# மின்சார வாகனங்களின் இறக்குமதி அதிகரிக்கப்படும்

வாகனங்களை இறக்குமதி செய்யும் போது மின்சார வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இலங்கை அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

2030 ஆம் ஆண்டிற்குள் 70% இலக்குகளை அடையும் வகையில் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை செயல்படுத்தும் திட்டங்களுக்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவது சர்வதேச ட்ரெண்டாகிவிட்டது. உலக சந்தையில் மின்சார வாகனங்களின் விலை அதிகமாக இருந்தாலும் படிப்படியாக குறைந்து வருகிறது.

புதைபடிவ எரிபொருள் வாகனங்களில் இருந்து மின்சார வாகனங்களாக மாற்றும் மாற்றம் தற்போது நெதர்லாந்து போன்ற பல்வேறு நாடுகளில் நடக்கிறது.

தற்போதைய பொருளாதார வீழ்ச்சியுடன் இலங்கை படிப்படியாக அந்த இலக்கை அடைய வேண்டும். எவ்வாறாயினும், 2030 ஆம் ஆண்டளவில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மாற்றத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள இலங்கை திட்டமிட்டுள்ளது என கலாநிதி ஜாசிங்க தெரிவித்தார்.

# ஜி20 மாநாட்டில் கலந்துகொள்ளாத தலைவர்கள்

உலக அளவில் பொருளாதாரத்தில் நிலவும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக ஜி20 அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட 20 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பின் 2022-23 ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருக்கிறது.

டெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில், வரும் 9, 10 ஆம் திகதிகளில், 'ஜி 20' உச்சி மாநாடு நடக்கிறது. இதில் பங்கேற்பதற்காக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், அவுஸ்திரேலியா பிரதமர் அந்தோணி அல்பானிஸி, சவுதி அரேபியா இளவரசர் முகமது பின் சல்மான் உட்பட பல்வேறு நாட்டுத் தலைவர்களும் டெல்லிக்குச் செல்கின்றனர். 10,000க்கும் அதிகமான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சீனா மற்றும் ரஷ்ய அதிபர்கள் பங்கேற்கவில்லை. இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "இந்தியக் குடியரசின் அழைப்பை ஏற்று, இந்தியாவின் தலைநகர் டெல்லியில் வரும் 9, 10 திகதிகளில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டில் சீனப் பிரதமர் லி கியாங் தலைமையிலான குழுவினர் கலந்துகொள்வார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இருப்பினும், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஜி20 மாநாட்டில் கலந்துகொள்ளாததற்கான காரணம் பற்றி பீஜிங் தரப்பு இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. கடந்த மார்ச் 2023 இல் சீனப் பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் லி கியாங் இந்தியாவுக்கு வருவது இதுவே முதன் முறையாகும். ஷாங்காய் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவரான லி கியாங், ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் தீவிர விசுவாசி என்பதும், சீன அரசியலின் நம்பர் 2 என்பதும் கவனிக்கத்தக்கது. அதேபோல் இந்த மாநாட்டில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பங்கேற்கமாட்டார் என்றும், அவருக்குப் பதிலாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கி லாரவ் பங்கேற்பார் என்றும் அந்த நாடு அறிவித்திருக்கிறது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கலந்துகொள்ளாதது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "ஜி20 மாநாடு நடக்கும் இந்தியாவுக்கான பயணத்தை மிக ஆவலுடன் காத்திருக்கிறேன். ஜி20 மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கலந்துகொள்ளாதது பற்றிக் கேள்விப்பட்டபோது நான் ஏமாற்றமடைந்தேன். மாநாட்டில் அவர் பங்கேற்காவிட்டாலும், விரைவில் சந்தித்துப் பேசுவேன்" என்று கூறியிருக்கிறார்.

ஜி20 மாநாட்டில் பங்கேற்க, வரும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி ஜோ பைடன் இந்தியாவும் வரும்படி திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும், நான்கு நாட்கள் இந்தியாவில் அவர் தங்கவிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கிடையே ஜோ பைடனின் மனைவி ஜில் பைடனுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்திருக்கிறது. இதனால் ஜோ பைடனின் வருகை குறித்து வெள்ளை மாளிகை மீண்டும் உறுதி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

முன்னதாக, ஜோ பைடன், ஜி20 மாநாடு தொடங்குவதற்கு இரு நாட்களுக்கு முன்னரே வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களும் திட்டமிடப்பட்டிருந்தன. தற்போது அதில் மாற்றங்கள் வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதற்கிடையே மாநாட்டின் தலைவர் என்ற முறையில் பிரதமர் நரேந்திர மோடி பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'ஜி20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருப்பது, மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, இப்போது மனிதனை மையமாகக்கொண்டதாக மாறியிருக்கிறது. இதன் உந்துசக்தியாக இந்தியா செயல்படுகிறது. உலக நலனுக்கான 'சப்கா சாத், சப்கா விகாஸ்' வழிகாட்டும் கொள்கை வகுக்கப்பட்டது. வரும் 2047 ஆம் ஆண்டில் இந்தியா வளர்ந்த நாடாக இருக்கும். நாட்டில் ஊழல், சாதிவெறி, வகுப்புவாதத்துக்கு இனிமேல் இடமிருக்காது. ஜி20 உச்சி மாநாட்டில் எதிர்கால திட்டத்துக்கான பாதை வகுக்கப்படும். இது வெறும் யோசனைகளாக இருக்காது.

ஒரு பில்லியன் மக்கள் பசியால் வாடுவதாகக் கூறப்பட்ட இந்தியா, தற்போது ஒரு பில்லியன் ஆசைகளுடன், இரண்டு பில்லியன் திறமையான இளைஞர்களின் கைகளுடன் இருக்கிறது. அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கான வளர்ச்சியின் அடித்தளத்தை இந்தியர்கள் வகுப்பார்கள். அதில் இந்தியர்களின் பங்கு அதிகமாக இருக்கும். உலகின் முதல் மூன்று பொருளாதார நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இருக்கும். பாகிஸ்தான், சீனாவின் ஆட்சேபனைகளை மீறி காஷ்மீர், அருணாச்சல பிரதேசத்தில் ஜி20 மாநாடுகள் நடத்தப்பட்டன. நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் மாநாடுகளை நடத்தினோம். ஜி20 உச்சி மாநாட்டின் நோக்கம் 'வசுதைவ குடும்பம்' என்பதாகும். இது வெறும் கோஷம் மட்டுமல்ல, நம்முடைய நாட்டின் கலாசார நெறிமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமையும் என்று தன் கருத்தைப் பதிவுசெய்திருக்கிறார்.

ஜி20 மாநாட்டின் ஏற்பாடுகள் குறித்து செய்தியாளர்களைச் சந்தித்த சிறப்பு செயலாளர் முக்தேஷ் பர்தேசி, "ஜி20 மாநாட்டுக்கு வருகை தரும் உலகத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தங்குவதற்கு, மத்திய டெல்லி, ஏரோசிட்டி, குருகிராம் உட்பட அதைச் சுற்றியிருக்கும் பகுதிகளிலுள்ள ஹோட்டல்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களின் பாதுகாப்புப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட நாட்டு குழுக்களுடன், புது டெல்லி பொலிஸார் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

டெல்லியில் சாலையோரங்களில் விற்பனை செய்யப்படும் உணவுகள் பிரசித்திபெற்றவை. குறிப்பாக, சாந்தினி சௌக் பகுதியில் விற்கப்படும் சாலையோர உணவுகள் சர்வதேச அளவில் புகழ்பெற்றவை. இந்த மாநாட்டில், வெளிநாட்டுத் தலைவர்களுக்கு டெல்லியில் சாலையோர உணவு வகைகளைப் பரிமாற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு, நம் நாட்டின் பாரம்பரிய உணவான தினையில் செய்யப்பட்ட பல புதிய உணவுகள், வெளிநாட்டுத் தலைவர்களுக்குப் பரிமாறப்படவிருக்கின்றன. இதற்காக, நம் நாட்டின் புகழ்பெற்ற சமையல் கலைஞர்கள் இரவு, பகலாகப் பல்வேறு புதிய உணவு வகைகளை உருவாக்கி, உலகத் தலைவர்களுக்கான உணவுப் பட்டியலைத் தயார் செய்துவருகின்றனர். அதேபோல, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படவிருக்கும் பரிசுப்பொருட்களிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நாட்டின் கைவினைப் பொருட்கள், ஜவுளி மற்றும் ஓவிய மரபுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவிருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறார் ■








# பூமியை ஆளும் செயற்கை நுண்ணறிவு



செல்வகுமார் ரினோஷன்
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

"வணக்கம் நான் உங்கள் புதிய நண்பி சோபியா. நான் AI ஆள் உருவாக்கப்பட்டவள்" என்ற குரல் உலகமெங்கும் கேட்ட வண்ணமுள்ளது. உலகில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் Artificial intelligence (AI) என்பதே பேசுபொருளாகிறது. உண்மையில் AI என்றாலென்ன?, எப்போது வந்தது? என்ன செய்கிறது? இதன் எதிர்காலம் எப்படி இருக்கும்? என்பது எம் மனக்கண்ணில் பதிய வேண்டிய விடயமாகும். எம்முடைய கணினி தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அறிவார்ந்த நுண்ணறிவினை உருவாக்கி மனிதர்கள் போலவும் சிலநேரம் மனிதர்களை விட வேகமாகவும் கற்றல், கற்பித்தல், சுய திருத்தங்களால் உருவெடுத்த உயர் தொழில்நுட்பமே செயற்கை நுண்ணறிவாகும்.

இதனை 1956 இல் ஜோன் மக்கர்த்தி என்ற அமெரிக்க கணினி விஞ்ஞானி டாட் மோத் மாநாட்டில் முதன் முதலில் முன்வைத்தார். இந்த AI யானது வலுவான AI, வலு குறைந்த AI என மனிதனை அணுகுகின்றது. வலு குறைந்த AI என்பது I phone களிலுள்ள siri என்ற தொழில்நுட்பம் மற்றும் ஒருவருடைய முகத்தின் மூலம் அவர் தொடர்பான விடயங்களைக் கண்டறிவது, சமூக ஊடகப் பாவனை மூலம் எமது தேவை, விருப்பத்தை அறிதல் போன்றனவாகும். இவை சில குறிப்பிட்ட வேலைகளை மனித கட்டளைக்கேற்ப செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆனால் வலுவான AI மனித மூலைக்கு ஒப்பாக, சிலசமயம் அதைவிட அதிக வேகமாகவும் செயலாற்றும் மனித உருவம் கொண்ட Humanistic robot களாகும். இவை சுய கற்றல்களைச் செய்ய வல்லது. அண்மையில் அமெரிக்க இராணுவத்தின் AI ரோபோட் youtube ஐ பார்த்து சமைக்க கற்றுக் கொண்டது.

இந்த AI முறையை மேலும் ANI, AGI, ASI என வகைப்படுத்தலாம். ANI என்பது Artificial narrow intelligence இது ChatGpt 3.5 ஆகும். மனிதனின் அளவு சிந்திக்க முடியாது. மனிதன் சொல்வதை மட்டும் செய்யக்கூடியது. இதில் Text மட்டுமே பயன்படுத்த முடியும். AGI என்பது Artificial General Intelligence இது மனித மூளைக்கு ஒப்பானது. ChatGpt 4 அல்லது ChatGpt பிளஸ் எனலாம். இங்கு Text மற்றும் படங்களைப் பயன்படுத்தலாம். இதனை மாதாந்தம் 20 டொலர்கள் வரை கட்டணம் செலுத்தியே பெற முடியும். அந்தளவிற்கு தகவல்களைக்கொண்டது. பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் Programming செய்பவர்களுமே பயன்படுத்துவார்கள். இதில் ஒரு புகைப்படத்தினை உருவாக்கி நொடிப்பொழுதில் எமக்கேற்ப செம்மைப்படுத்தலும் செய்யலாம்.

இது ஆறு மாத உருவாக்கமென உருவாக்குனர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, பார்வையற்றோர் இதனைப் பயன்படுத்தும்போது முன்னால் என்ன பொருள் உள்ளது? என்ன நடக்கின்றது? என்பதைச் சொல்லும். அதனை "Be my eyes (நீ என் கண்களாய் இரு) என்பர். இதனையே மொழிக் கற்றலுக்கும் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக கான் அக்கடமி, ஐஸ்லாந்து நாட்டிலும் மொழி விருத்தி இதன் மூலமாகவே நடாத்தப்படுகின்றது. ASI என்பது Artificial super intelligence அதாவது மனிதனைத் தாண்டியும் வேகமாக சிந்திக்கக் கூடியது. மனிதனைப் போல உருவம் கொண்டு அவன் செய்வதையும் அதைவிடவும் யோசித்துச் செய்யும் ஆற்றல், வேகம், துல்லியம் கொண்டது. இனியும் AIயை பல வகைப்பிரிப்புக்குள்ளாக்கினாலும் ஆச்சரியமல்ல.

இந்த AI யில் கவனிக்கப்பட வேண்டிய விடயமே google Now, Siri, Sofia, cortana போன்ற AI நுட்பங்கள் பெண்கள் குரல்வளத்திலேயே இருக்கின்றன. காரணம் பெண்களின் குரல்களே அநேகமாக விரும்பப்படுகிறதாம். கார்ல் பெட்ரிக் மேக்டோர்மன் கூறுகையில் AIயில் ஆண்களே அதிகமாக ஈடுபடுகின்றதால் பெண் சார் செயற்கை நுண்ணறிவுகளையே விரும்புகின்றனர். மேலும் பெண்களின் இயல்பே ஏனையவர்களுக்கும் இலகுவாகின்றது என்கின்றார்.

Dr. ஜி லூப் போர்ட் கூறுவது போல 2025 இல் செல்லப் பிராணிகளாக AI Robot வந்துவிடுமளவு மனிதன் அதனோடு ஒத்திசைந்து போகின்றான். எடுத்துக்காட்டாக சீனாவின் ஜீயாங் என்ற செய்தி நிறுவனம் சோஹூ என்ற செய்தி வாசிப்பாளரை உருவாக்கியது. இதேபோல் ஒடிசாவில் AI பயன்படுத்தி லிசா என்ற செய்தி வாசிப்பாளரை உருவாக்கி மனித ஒன்றிணைப்பைக் காட்டுகிறது. இப்படி மனிதன் செய்தியைக்கூட AI மூலம் கேட்க ஆரம்பித்து விட்டான்.

மேலும் அண்மையில் நியூயோர்க்கை சேர்ந்த ரோசன்னா ராமோஸ் என்பவர் AI மூலம் தனக்கு விரும்பியவாறு உருவாக்கி AI ஆணை திருமணம் செய்து கொண்டார்.

இதனைப் பார்க்கும்போது நேர் குருஸ்வல் சொன்ன 2029 மனிதனைப் போல Robot உலாவும் என்ற கூற்று நினைவுக்கு வருகிறது. அத்தோடு ஹாங்காங் நாட்டின் பிரபல நிறுவனமான நேவ Drogon web soft நிறுவனத்தின் CEO வாக டொம் A என்ற AI நபரை வைத்துள்ளது. ஒரு நிறுவனத்தின் CEO AI என்று சொல்லுமளவு AI விஸ்வரூபமடைந்துள்ளது. இப்படியே போகுமானால் பூமியில் அதிகாரம் செலுத்தி மனிதனை அடிமையில் ஆழ்த்தி விடுமென பலர் அச்சம் கொள்கின்றனர்.

ஆனால், AI யினால் மனித வேலைப்பளு குறைந்து நேரம் சேமிக்கப்படுகின்றது, கடின ஆய்வுகள் இலகுவாகின்றன. மருத்துவத்துறையில்கூட இன்று AI சார்ந்த புதிய முயற்சிகள் Medical Artificial intelligence சேட்பாட், Med-palm2 தொழில்நுட்ப மருத்துவமனை ஆய்வு ஆரம்பமாகியுள்ளது. இதில் பிரபல Mago Clinic மருத்துவமனையும் கைகோர்த்துள்ளது.

அதனோடு விண்வெளி, சுரங்க, கடல் சார் மனித எல்லைகளுக்கப்பாற்பட்ட கடின ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

முக்கியமான அறுவை சிகிச்சை முறைகள், தொழிற்சாலை வேலைகளென எல்லாம் வந்துவிட்டது. அண்மையில்கூட AI கடை முதலாளிகள் ஜப்பான் நாட்டில் வந்துவிட்டனர். அதேசமயம் பெங்களூரில் கல்வித்துறை சார்ந்த ஆசிரியர்களை உருவாக்கி விட்டனர். ஜப்பான் உட்பட பல நாடுகளில் AI கள் விவசாயத்துக்கும் வந்துவிட்டன. அத்தோடு விபத்துக்களைக் குறைக்க AI வடிவ சாரதிகளென நினைத்துப் பார்க்க முடியாதளவு தொழில்நுட்பங்களாகியுள்ளது. இவ்வாறான முறைகள் மூலம் AI ஆனது தானாக கற்று சக்தியை அதிகரித்து தன் கால் பதிப்பை ஆழமாக ஊன்றுகின்றது. உதாரணமாக நைவுடிகஸ் சூப்பர் கம்யூட்டர் 100 மில்லியன் செய்திகளை படித்து எதிர்காலத்தைக் கணிக்கும் அளவு சுய கற்றல் தன்மை கொண்டது.

எம் நாடும் கணினி, தகவல் தொழில்நுட்பம் மூலம் தேசிய வருடாந்த வருமான பங்களிப்பில் 1.9 பில்லியன் US டொலர்கள் தருகிறது. இதில் செயற்கை நுண்ணறிவு நுட்பத்தினால் எவ்வளவு வருமென ஜனாதிபதி அறிக்கை தயாரிக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அடுத்தாண்டு AIக்கு ஒரு மில்லியன் ரூபாய் ஒதுக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இலங்கை செயற்கை நுண்ணறிவு மீது அதிகம் கவனம் செலுத்தி அதிக உயர்நிலை அடைய முதலீடு செய்ய வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அண்மையில் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் AI மூலம் முன்னேறி வருவது போல நாமும் முன்னேற வேண்டுமென கூறினார்.

அதேசமயம் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் அமைச்சரின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தனவும் AI மயமாக்கல் பற்றிப் பேசி உள்ளார். குறிப்பாக மாணவர்களின் கல்வி சார்ந்த விடயங்களுக்கு AI உதவுவதோடு AI சார்ந்த கற்கை நெறிகள் உயர் படிப்புகள்கூட உருவாக்கிவிட்டன.

இப்படியாக AIயால் நன்மை மட்டுமா? என்றால் இல்லை. Macafi software நிறுவன அறிக்கையின்படி AI voice ஏமாற்றம் காணும் நாடுகளில் இந்தியா முன்னிருக்கின்றதாம். அதனோடு AI வீடியோ Call மோசடியில் சீனாவில் 5 கோடி ரூபாயை ஒருவர் இழந்துள்ளார். மேலும் இத்தொழில்நுட்பம் பணியாளர்கள் வாய்ப்பு விதத்தைக் குறைக்கின்றன. அத்தோடு சுய கற்றலால் ஆபத்தும் நிகழலாம் எடுத்துக்காட்டாக, துர்கான் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களில் 90% ஆட்களை நீக்கியுள்ளது. வாடிக்கையாளர்கள் குறைகளை நீக்க 2 மணித்தியாலம் 13 நிமிடங்களாக எடுத்த கால அளவு இன்று 3 நிமிடம் 12 செக்கன்களாகிவிட்டது. இது 85% வேலைப்பளுவைக் குறைத்துள்ளதாக கூறுகின்றனர். 2020 - 2025 இடையில் கிட்டத்தட்ட 85 மில்லியன் தொழில் இழப்புகள் AIயால் ஏற்படலாமென ஆய்வுகள் கூறுகின்ற போதிலும் 97 மில்லியன் புதிய தொழில்கள் உருவாகலாமென எதிர்வு கூறினாலும் அவற்றிற்கேற்ப மாறுவது சற்று கடினமே.

அத்துடன் தனி உரிமைகள் அவதானம் வேண்டும். காரணம் AI யானது தனிநபர்களுடைய தகவல்களைச் சேமிக்கின்றது, பகுப்பாய்வு செய்கின்றது மற்றும் எம்முடைய ஒவ்வொரு தேடல், லைக் மற்றும் பகிர்வு தொடர்பாக நம்மை உளவு பார்க்கின்றது.

(21 ஆம் பக்கம் பார்க்க...)



# விசேட தேவையுள்ள குழந்தைகளும் கல்வியும்



சயனிகா ஸ்ரீகாந்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கல்வியியலிலே 'விசேடகல்வி' என்ற எண்ணக்கரு முக்கிய பங்கினை ஆற்றிவருகின்றது. அந்த விசேட கல்விப் பரப்பினுள் உள்ளடங்குவது மதி இறுக்கக் குழந்தைகளை வளப்படுத்துவதற்கான கல்வி முறையாகும். உடல் உள்ளுறுப்புகள், அவயவங்கள், புலனுறுப்புகள் அத்துடன் மூளையின் தொழிற்பாடு மற்றும் விருத்தி நிலைகளில் பிறக்கும் போதோ அல்லது பிறப்பின் பின்னரோ உருவாகின்ற பாதிப்புக்களால் குறிப்பிட்டளவு பிள்ளைகள் விசேட தேவையுள்ள பிள்ளைகள் என்ற பிரிவாக சமூகத்தில் வாழ்கின்றனர். இவற்றில் மூளை விருத்திக் கோளாறுகளுடன் குறிப்பிட்டளவு பிள்ளைகள் பிறக்கின்றனர். இவர்களில் மாறுபட்ட பல பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்ற குழந்தைகளும் உள்ளனர். அதில் அண்மைக்காலங்களில் உலகளாவிய ரீதியில் வேகமாக அதிகரித்த எண்ணிக்கையில் இவ் மதி இறுக்கமுடைய பிள்ளைகள் அதாவது 'ஓட்டிசம்' குழந்தைகள் உள்ளனர்.

சமுதாய நிலையிலிருந்து தனித்து விலகித் தெரியும் இவர்களை, "ஓட்டிசம்" நிலையிலுள்ளவர்கள் என்கிறோம். தமிழில் இந்நிலைக்கு "மதி இறுக்கம்" என்ற பதத்திற்கு மேலதிகமாக, "தற்சிந்தனையாளர்கள்", "தற்புனைவு ஆள்வு" என்றும் அழைப்பதுண்டு. காரணம், இவர்கள் தங்களுக்கென ஓர் உலகத்தை உருவாக்கி அதிலே சஞ்சரிப்பவர்களாய் இருப்பதோடு, எப்போதும் சிந்தனை வயப்பட்டிருப்பவர்களாகி, சமூகத்தோடு ஒட்டாது இருப்பார்கள். லியோ கேனரின் அறிக்கை, அஸ்பெர்ஜரின் ஆய்வறிக்கை என்பன ஓட்டிசம் பற்றிய ஆய்வில் முக்கியக் குறிப்புக்களாகும். சுருக்கமாக கூறின், "மதி இறுக்கம் என்பது ஒரு குழந்தையின் இயல்பான வளர்ச்சி நிலையில் ஊடுருவிப் பரவக்கூடிய விருத்தி நிலைக் கோளாறுகள் எனப்படும்."

அமெரிக்க உளவியல் சங்கம் மன இறுக்கக் குழந்தைகளிடம் காணப்படும் தொடர்பாடல் அல்லது கருத்துப்புலப்படுதல், பாதிக்கப்படுதல், சமுதாயச் செயற்பாடுகள் பாதிக்கப்படுதல், தனக்குத் தானே சுயமாகச் செய்யும் நடத்தைகள் போன்ற முக்கிய மூன்று பிரச்சினைகளை உள்ளடக்கி ஆறு நிலைகளாகப் பிரித்துள்ளனர். அவையாவன Autism Spectrum Disorder (ASD), Autism Disorder, Asperger's Disorder, Childhood Disintegrative Disorder, Pervasive Developmental Disorder, Rett's Disorder என்பனவாகும்.

இவ்வாறான மதி இறுக்கமுடைய குழந்தைகளை எவ்வாறு இனங்காணலாம்? என்பதை அறிதலே அவர்களுக்கான கல்வியின் அடிப்படை படிமுறையாகும். அதன்படி மதி இறுக்கமுடைய குழந்தைகள் பிறந்து ஆறு மாதமாகிய பின்பும் பெரியளவான புன்சிரிப்போ அல்லது ஏனைய உணர்வுபூர்வமான, மகிழ்ச்சியான வெளிப்பாடுகளோ இல்லாதிருத்தல், ஒன்பது மாதமாகியும் ஒலிகளையோ முகபாவ வெளிப்பாடுகளையோ புன்சிரிப்பையோ கொடுத்து வாங்கும் திறனற்று இருத்தல், பன்னிரண்டு மாதமாகியும் மழலை ஒலிகள் வெளிப்படாது இருத்தல், பன்னிரண்டு மாதங்களாகியும் ஒருவரைப் பார்த்து ஒன்றைக் காட்டும், அடைய எத்தனிக்கும் அல்லது கையசைக்கும் திறன்கள் இல்லாதிருத்தல், பதினாறு மாதங்களாகிய பின்னும் ஒரு வார்த்தையேனும் பேசாதிருத்தல், இரண்டு வயதாகியும் அர்த்தமுள்ள இரு சொற்களைச் சேர்த்து சொந்தமாகப் பேசுகின்ற திறன் இல்லாதிருத்தல் மற்றும் எந்த வயதில் இருந்தாலும் ஏற்கெனவே விருத்தியடைந்த மழலை ஒலி பேச்சு மற்றும் சமூகமயமாதல் திறன்கள் மறைந்து போதல் உட்பட அசாதாரண பண்பியல் மற்றும் நடத்தைகளைக் காணலாம்.

இவ்வாறான பிள்ளைகளிடத்து மதிப்பீடு செய்தல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் காணல் எனும் அடிப்படையில் ஒவ்வொரு நிலையிலும் கவனமுடன் செயற்படுவதன் மூலம் முன்னேற்றத்தினைக் காண முடியும். மதிப்பீடு செய்தல் எனும் போது குழந்தைகளுக்கு இயல்பாகவே திறன்கள் இருக்கும். செய்யும் ஒரு சில செயல்களையும் எந்த அளவுக்குத் திறம்படச் செய்கிறது என்பதை அறியவும் கல்வியில் மதிப்பீடு மற்றும் உளவியல்



மதிப்பீடு ஆகியவற்றின் மூலம் இவற்றை அறியலாம். இவற்றில் உடல் இயக்கத்திறன், தன் உதவிச் செயல்கள், தகவல்பரிமாற்றம், கல்விச்சமூக மாற்றம், தொழில்சார்திறன்கள் ஆகியவை அடங்கும்.

'திட்டமிடல்' எனும் போது குழந்தை எவ்விடங்களில் பின்தங்கி இருக்கிறது என்பது அறியப்பட்ட பிறகு அவற்றை முறையாகப் பட்டியலிட்டு அவற்றுள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அறிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, அமைதியாக இருக்கும் குழந்தை திடீரென்று அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு தன்னோடு பேசுபவர்களது கருத்தினை கேட்காது இருக்குமென்றால், இதில் முக்கியமான பிரச்சினை என்ன? அதனைத் தீர்க்க எவ்வாறான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்? யாரால் கொடுக்கப்பட வேண்டும்? போன்றவற்றைத் திட்டமிட வேண்டும். குறித்த பிரச்சினைகளைத் தீர்க்கும் தரப்பினரால் பரிந்துரைக்கப்படும் விடயங்கள் எல்லாம் அனைத்துக் குழந்தைகளுக்கும் பொதுவானவை அல்ல. ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வித் திட்டம் மாறுபடும். அதனால் இதன் பெயர் தனியாள் கல்வித் திட்டம் (Individual Education Plan-IEP) எனப்படுகிறது.

குறைகள் அறிந்து என்ன செய்ய வேண்டும் என்ற நிலைக்கு வந்ததன் பின்னர் அதற்கான நடைமுறைப்படுத்தல்கள் இடம்பெறும். சாதாரண பிள்ளைகள் போலல்லாது மதி இறுக்கமுடைய குழந்தைகள் உடனே நாம் கூறும் விடயங்களுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள். ஆகவே, அதற்கேற்றால் போல கல்வி முறைகள் இடம்பெற வேண்டும். குழந்தை விரும்பும் நேரத்தில் மாத்திரம் கற்பிக்க வேண்டும், ஒரே நேரத்தில் பலவற்றை திணிக்கக் கூடாது, பிள்ளைக்கு இயல்பான சூழ்நிலையில் மட்டுமே கற்பிக்க வேண்டும், இடையூறு இல்லாத கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும், வலுவூட்டிகளைப் பயன்படுத்த வேண்டும், கற்பிக்கும் நேரம் மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், பிள்ளையின் பெற்றோரோடு இடையூடாட்டத்தினைப் பேணுவதோடு வீட்டுச்சூழலில் பிள்ளையின் நடத்தைகளை அவதானிக்க பெற்றோருக்கும் போதிய தெளிவினைக் கொடுக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளைச் செய்விக்கின்றபோது பெறுபேறுகள் உடனடியாகக் கிடைக்கப்பெறும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை முன்னேற்றம் காணல் நடவடிக்கை இடம்பெறும். எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் ஏற்படும் வரை பயிற்சியினைத் தொடரவேண்டும். அதற்காக, படம் விளக்கமுறை மற்றும் எளிதாகப் போதிக்கும் பாடப்புத்தகங்களை உபயோகித்தல் வேண்டும், பிள்ளையின் வளர்ச்சிக்கு தகுந்த மாதிரி கால அளவில் மாற்றம் ஏற்படுத்தப்படலாம், பாடங்களை எழுத, வீட்டு வேலைகளைச் செய்ய கால அவகாசம் அதிகமாகக் கொடுக்க வேண்டும், சுற்றுச்சூழலுடன் தன்னைப் பொருத்திக்கொள்ள தகுந்தவாறு இடங்களை அமைத்தல் வேண்டும், எல்லாவற்றுக்கும் மேலாக புரிதலோடு அன்பாக நடக்கக் கூடியவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.

மதி இறுக்கமுடைய பிள்ளைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பல நியம நடைமுறைகள் உள்ளன. அவற்றுள் பிரயோக நடத்தை சார் பகுப்பாய்வு (Applid Behavior Analysis-ABA), பகுப்பாய்வு சார்ந்த பரீட்சார்த்த கற்கை மாதிரியமைப்பு (லோவாஸ்) (Discrete Trial Teaching-DTT/ Lovaas Model), ஒன்றாக இருக்கும் காலம் அல்லது பல்வேறு தொடர்புகளின் மாதிரி அமைப்புக்கள் (Floor time or Difference Relationship Model- DIR), படங்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலமான தொடர்பாடல்முறை (Picture Exchange Communication System- PECS), பிரதான பதில் நடவடிக்கை சிகிச்சை முறை (Pivotal Response Treatment-PRT), தொடர்புகளை வளர்க்கும் தலையீடுகள் (Relationship De9velopment Intervention-RDI), சமூகத் தொடர்பாடல் / உணர்வுகளைக் கட்டுப்படுத்தல் / ஏனையவர்களோடு கொடுக்கல் வாங்கலினை செய்ய உதவுதல் (Social Communication / Emotional Regulation / Transactional Support-SCERTS), ஓட்டிசம் உள்ள பிள்ளைகள் அது சம்பந்தமான தொடர்பாடல் அசௌகரியங்களைக் கொண்டுள்ள பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களுக்கு கல்வி அறிவூட்டும் முறை (Training and Education of Autistic and Related Communication Handicapped Children-TEACCH), மொழி, கற்றல் திறன்களை ஆராய்வு செய்தல் (Assessment of Bascic Launguage Learing Skills-ABLLS) என்பன முக்கியமானதாகும்.

மதி இறுக்கமுடைய பிள்ளைகள் சமூகத்தில் அதிகரித்த நிலையில் அவர்களை வளப்படுத்தக்கூடிய இத்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கின்றார்களா? என்பது யோசிக்க வேண்டிய பிரச்சினையாகும். முன்பள்ளி ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்களும் மாற்றுக் கருத்துகளும் எழுந்துள்ள நிலையில் மதி இறுக்கமுடைய பிள்ளைகளுக்கான கல்வியில் ஈடுபடுவோருக்கான வாண்மை விருத்தியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட கல்வி, குழந்தை விருத்தி செயற்பாடுகள் மற்றும் கல்வி உளவியல் தொடர்பான பூரண விளக்கமுடையவர்களாக இருப்பது மிக அவசியமாகும்.

**"வளமுடைய எதிர்காலத்திற்கு வளமுடையப் பிள்ளைகளை உருவாக்குவது ஆசிரியத்துவத்தின் மகத்துவமாகும்."** ■

# ஒரு தாயின் இரக்க குணம்

அரிசி குறைவென காலை உன்குரல்
கேட்டெழுந்தேன்
அன்றுதான் உன் இரக்க குணம்
நன்குணர்ந்தேன்

நீ கூலிக்குச் செல்லும் பரபரப்பில்
குறைவான சோறு உன் பாத்திரத்தில்
நம் வீட்டு ஆடுகள் அருகில் வர



✍ கவிமொழியன்

அவைகளுக்கு சோறு நீயும் தர
அதைக் கண்ட காகம் பசியில் கரைய
அதற்கும் விருந்திட்டு சோறும் குறைய
அதிலும் மீதியை பூனை கேட்க – நீயோ
தாராளமாய் அள்ளிக் கொடுக்க

பிள்ளைக்கு சோறு இல்லையென்று
உன் பசியை மறைத்தாயோ – அந்த

பிராணிகள் பசியாற உன்னை நீ
மறந்தாயோ
அவைகளுக்கும் ஏக்கம் அம்மா – நீ
தாயாக கிடைக்க – மீண்டும்
ஜென்மம் பெற ஆசையம்மா – உன்
மகனாக பிறக்க மீண்டும்
ஜென்மம் பெற ஆசையம்மா – உன்
மகனாக பிறக்க.

---

# அப்பா

தன் தேவைகளை வெளிக்காட்டாமல்
சேவைகள் செய்திடும் ஒரு ஜீவன்
ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளாமல்
அயராது உழைத்திடும் ஒரு உயிர்
வீட்டுப் பந்தியில் அரை முட்டையில்
ஆனந்தம் அடையும் ஒரு தூய ஆத்மா
என்னிடம் தோற்பதற்காகவே தோன்றிய
தோழன்
தான் அடையா உயரத்தை நான் அடைய
உதவிய ஏணி
தன்மானத்தை பல இடங்களில் எனக்காக
விட்டுக் கொடுத்த தன்னிகரற்ற தகப்பன்
எனக்காக அள்ளி அள்ளிக் கொடுத்தும்
அடங்காத பேராசைக்காரன்
என் வாழ்வில் யாரும் கற்றுக் கொடுக்காத
பாடங்களை கற்றுத் தந்த பேராசிரியர்
எனக்காக தன் ஆசைகளை துறந்த
புத்தர்
எதிர்பார்ப்புகள் ஏதும் இல்லை

எளிமையின் முத்தப் பிள்ளை
நீங்கள் ஆற்றிய தொண்டு ஏராளம்
நீங்கள் காட்டிய அன்பு தாராளம்
நான் உங்களுக்கு கைமாறு செய்ய
விழையும் போது என் போல் நீ உன்



✍ சிக்கந்தர்

பிள்ளைகளுக்கு இரு அதுவே நீ எனக்கு
செய்யும் கைமாறு என்று சொல்லிவிட்டு
சொல்லாமலே போன அப்பா.

---

# நம்மை நாம் இனி மாற்றி நடப்போம்



✍ நதுநசி

நம்மைத் தாங்கிய
மனிதரை மிதித்து
மகிழும் வாழ்வும்
ஒரு வாழ்வோ?

புத்தி சொல்லிட
கேட்டு நடந்து
வென்று நின்ற
நாமா திட்டினோம்

அந்த நொடியில்
சிந்தை தந்திட
உந்தியது என்ன?
எங்கள் நிலையே

நாளை நலம்
வாழ்ந்திட எண்ணி
வந்து தந்த அந்த
உதவி பெரிதன்றோ?

ஏறிட தாங்கிய
மரத்தை கொடியும்
வெறுப்பது இல்லை
மறுப்பதும் இல்லை

அகழ்வாரை பூமி
தாங்கி இருக்கும்
பகையான போதும்
பாசம் வற்றிடாது

ஏற்றி வைத்து
எச்சரிக்கை செய்து
நம்மை விட்ட வரை
எடுத்தெறிவது ஏனோ?

மாற்றி நாம் இனி
நடப்போம் மதித்து
ஏற்றி விட்டவரை
போற்றி வாழ்ந்தே!

---

# பருவப் பெண்ணே



✍ அபி யது

பருவம் ஆகும்
வரை இருந்தாய்
பெற்றோரின் செல்லக்
குழந்தையாக நீயும்

தாவணி கட்டியதும்
மாறி விட்டாய்
சமூக போராட்டத்தின்
போராளியாய்

உனக்கென உரிமை
தனி மரியாதை
சொந்தமான முடிவு
மகிழ்வான வாழ்வு

காலங்கள் போகிறது
பருவமும் மாறுகிறது
தலைக்கணம் பிடிக்கிறது
தவிக்கிறோம் எதுவும் தெரியாமலே

எண்ணங்கள் சிதறாமல்
போகும் வழி மாறாமல்
திடமான மனதுடன்
இருந்தால் போதும்
வாழ்வு கிட்டுமே.

---

# உதவி

இக்கட்டான நிலையில்
இருக்கையில் யாராவது
உதவமாட்டாரா என
மனம் ஏங்கும்

அப்போது நாம்
உதவியவர்கள் நம்மை
மதிக்கார் பார்த்து ஏளனமாக சிரிப்பர்

இங்கு உதவி பெற பலர்
உதவுவதற்கு ஒருவர்
வரார் என்ற யதார்த்தம்
புரியும்

ஏழை ஏழைக்குதவுவான்
இருப்பதைக் கொண்டு
ஆனால் பணக்காரன்
ஏழைக்குதவமாட்டான்

ஏன் என்றால் தனக்கு
போட்டியாக வளர்ந்து
விடுவான் என்ற எண்ணம்
எல்லோரும் சுயநலம்



✍ சனா

இன்றி மனிதம்
கொண்டு வாழுகையில்
வறுமை ஒழியும்.

---

# சந்திரயான்

அன்று நிலவைக் காட்டி
குழந்தைகளுக்கு
சோறு ஊட்டி மகிழ்ந்தோம்

வருங்காலத்தில்
நிலவில் அமர்ந்து கொண்டு
பூமியைக் காட்டி
குழந்தைகளுக்கு
சோறு ஊட்டி மகிழும் காலம்
வெகு தூரமில்லை

விண்ணைத் தொட்டு
மகிழ இயலுமா? என்று
அன்று கேட்ட கேள்விக்கு
இயலும் என்று
இன்று

விண்வெளி விஞ்ஞானிகள்
விடையளித்துள்ளார்கள்
விஞ்ஞானிகளை
வாழ்த்தி மகிழ்வோம்
வாழ்க பாரத தேசம்.



✍ சுபா

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

80

ரமணி



தமிழ்த்திரை உலகில் நடிகை புஷ்பலதா அதிஷ்டம் இல்லாதவர் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு சில படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார். பெரும்பாலும் இரண்டாவது நாயகியாகவே வலம் வந்தார். தங்கை வேடத்துக்கு மிகப் பொருத்தமான நடிகையாகத் திகழ்ந்தார்.

நடிப்புத் திறனிலும் குறை சொல்ல முடியாதவர். ஒரு சில படங்களைத் தவிர்த்துப் பெரும்பாலான படங்களில் இரண்டாவது நாயகி அல்லது அக்கா, அண்ணி, தங்கை இப்படியான வேடங்களே அவருக்கு அளிக்கப்பட்டது புரியாத புதிர். நாட்டியம் கற்றுத் தேறிய கோயமுத்தூர் பொண்ணு கோயமுத்தூரில் பிறந்து வளர்ந்த பெண். 6 பெண் மக்கள், 2 ஆண் பிள்ளைகள் என எட்டு குழந்தைகளைக் கொண்ட மிகப் பெரிய கத்தோலிக்கக் கிறித்தவக் குடும்பத்தில் ஐந்தாவது பெண்ணாகப் பிறந்தவர்.

7 வயது குழந்தை புஷ்பலதாவும் மிகச் சூட்டிகையாக நாட்டியத்தைக் கற்றுத் தேர்ந்தார். நோஞ்சான் உடலும் வெகுவேகமாகத் தேறியது. அக்காலகட்டத்தில் இறுக்கமான சூழலைக் கொண்ட குடும்ப உறவுகளுக்கு மத்தியில், பெண் குழந்தையை நாட்டியம் கற்க அனுப்பியது உறவினர்களிடையே பெரும் புரளிப் பேச்சாக மாறியது. குடும்பப் பெண்கள் நாட்டியம் கற்பதும் ஆடுவதும் கௌரவமானதல்ல என்ற கருத்து ஆழமாக வேரூன்றி இருந்ததால், உறவினர்கள் இவர்கள் குடும்பத்தைத் தங்கள் உறவிலிருந்து முற்றிலுமாகத் துண்டித்துக் கொண்டார்கள்.

9 வயதில் நாட்டிய அரங்கேற்றமும் நிகழ்ந்தது. புஷ்பலதாவின் வாழ்க்கையை அடுத்தகட்டப் பாய்ச்சலுக்கு நகர்த்துவதில் உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்தவர் அந்தக் கால நாடக நடிகைகளில் ஒருவரும் ஹார்மோனியக் கலைஞருமான பி.எஸ்.ரத்னாபாய். வீட்டுக்கு அருகிலேயே இருந்த அவருக்கு குழந்தைகள் இல்லை என்பதால், புஷ்பலதா மீது மிகுந்த வாஞ்சையும் அன்பும் கொண்டவராக இருந்தார். பெரும்பாலான நேரங்களை அவர் வீட்டிலேயே கழித்தார் புஷ்பலதா.

அங்கிருந்துதான் நாடகத்துறை சார்ந்தவர்களுடன் பழக்கமும் அவருக்கு ஏற்பட்டது. 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி' என்ற சொல்லாடலுக்கு ஏற்ப தந்தையாரின் நிதி நிலையும் ஆட்டம் கண்டது. குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது. அதனால், பத்து வயதிலிருந்தே நாட்டியமும் நாடகமும் புஷ்பலதாவுக்கு வாழ்க்கைத் தேவையாக ஆனது. எம்.ஜி.ஆர். நாடக மன்றத்துடன் ஏற்பட்ட தொடர்பு அவருக்கு எம்.ஜி.ஆரின் பல நாடகங்களில் நடிப்பதற்கு உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்தது. அது திரையுலகை நோக்கியும் மெல்ல நகர்த்திச் சென்றது.

'மந்திரிகுமாரி' படத்தில் கள்ளர் கூட்டத் தலைவனாக, பிரதான வில்லனாக நடித்த எஸ்.ஏ. நடராஜன், கோவையைச் சேர்ந்தவர். தங்கள் ஊர்ப் பெண் என்ற பாசத்திலும் புஷ்பலதாவை நாடகங்களில் பார்த்திருந்ததாலும் அவரது திறமை மீது இருந்த நம்பிக்கையிலும் தான் சொந்தமாகத் தயாரித்து இயக்கிய 'நல்ல தங்கை' படத்தில் ஒரு சிறு வேடத்தில் நடிப்பதற்கு வாய்ப்பளித்தார். 1955 இல் 'நல்ல தங்கை' படத்தில் குழந்தை முகம் மாறாத தோற்றத்தில் பதின்பருவச் சிறுமியாக பாவாடை, தாவணி அணிந்த சிறு பெண்ணாக அறிமுகமானார் புஷ்பலதா.

இரண்டும்கெட்டான் வயதாக இருந்ததால் சினிமாவில் தொடர்ந்து வாய்ப்புகள் இல்லை. நாடகங்களிலும் நாட்டியத்திலும் மட்டுமே கவனம் செலுத்தி வந்தார். அதன் பின் பல ஆண்டுகள் கழித்து அழகு கொஞ்சும் இளம் பெண்ணாக 'செங்கோட்டை சிங்கம்' படத்தின் மூலம் அறிமுகமானார்.

புஷ்பலதா ஏற்று நடித்த படங்களிலும் மிகவும் கண்டிப்பும் கறாரும் நிறைந்தவராக, பொறுப்புணர்வு மிக்க பெண்ணாகப் பல படங்களில் தோன்றியிருக்கிறார். 'கை கொடுத்த தெய்வம்' படத்தில் குடும்பத்தின் கடைக்குட்டிப் பெண் சகுந்தலா (புஷ்பலதா). மூத்த அக்கா கோகிலா (சாவித்திரி), படித்தவள் என்றாலும் உலகம் அறியாத வெகுளிப்பெண். இளம் பெண்ணுக்கே உரிய எந்தப் பண்பு நலன்களையும் கடைப்பிடிக்கத் தெரியாதவள். அதனால் சமூகத்தில் அவளுக்கு ஏற்படும் கெட்ட பெயரையும் அபவாதத்தையும் சேர்த்தே சுமக்கிறாள்.

'பார் மகளே பார்' படத்தில் வசதியான வீட்டுப் பெண்களேயானாலும் கண்டிப்பு மிக்க தந்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்களாக சந்திராவும் காந்தாவும் (விஜயகுமாரியும் புஷ்பலதாவும்). மூத்த பெண் சந்திரா அப்பாவைப் பார்த்து பயந்து நடுங்க, இளைய மகள் காந்தா, நியாயமான காரணங்களுக்காக அப்பாவிடம் துணிச்சலுடன் எதிர்த்துப் பேசும் குணமுள்ளவள், அதேநேரம் சுயமரியாதை மிக்கவளும்கூட. 'வெட்கமாய் இருக்குதடி, இந்த வேலவர் செய்திடும் வேலை எல்லாமே' என்ற பாடலுக்கு இருவரும் இணைந்து பரத நாட்டியம் ஆடி இருக்கிறார்கள்.

புஷ்பலதா முறையாக பரதம் பயின்றவர். விஜயகுமாரிக்கு நாட்டியம் பரிச்சயம் இல்லாதது. ஆனால், அந்தப் பாடல் காட்சியில் இருவருமே மிகச் சிறப்பாக ஆடியிருப்பார்கள். விஜயகுமாரி பலமுறை ஒத்திகை பார்த்து ஆட, எந்த ஒத்திகைக்கும் வராமலே மிக எளிதாக ஆடி விட்டார் புஷ்பலதா என்று இந்தப் படம் பற்றிய தன் நினைவுகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார் நடிகை விஜயகுமாரி.

விஜயகுமாரி - புஷ்பலதா இருவரும் பல படங்களில் இணைந்து சகோதரிகளாக, உற்ற தோழிகளாக, அண்ணி - நாத்தனார் உறவில் என நடித்திருக்கிறார்கள். நிஜத்தில் உடன் பிறந்த சகோதரிகள் போன்றே தோற்றம் கொண்டவர்கள் இவர்கள். இருவரும் கோயமுத்தூர்க்காரர்கள். இருவரும் இணைந்து நடித்த பல பாடல்கள் மிகப் பெரும் ஹிட் பாடல்கள். 'தூது சொல்ல ஒரு தோழி இல்லை என துயர் கொண்டாயோ தலைவி', 'அவள் மெல்லச் சிரித்தாள் ஒன்று சொல்ல நினைத்தாள்', 'கட்டித் தங்க ராஜாவுக்குக் காலை நேரம் கல்யாணம்' போன்ற பாடல்களைச் சொல்லலாம்.

'நானும் ஒரு பெண்' படத்தில் அறிமுகமான ஏ.வி.எம்.ராஜனுடன் இணைந்து அப்படத்தில் நடித்தார். அப்படத்தில் நடிக்கும்போது ஏற்பட்ட அறிமுகம், அதைத் தொடர்ந்து இருவருக்குள்ளும் ஏற்பட்ட ஈர்ப்பு நாளடைவில் காதலாக மாறியது. புதுக்கோட்டையைச் சொந்த ஊராகக் கொண்ட சண்முக சுந்தரம் என்ற ஏ.வி.எம். ராஜன், ஏற்கெனவே திருமணமானவர். புஷ்பலதா மீது கொண்ட தீவிர காதல் 1964 இல் திருமணத்தில் முடிந்தது. திரையுலகில் இம்மாதிரியான காதலும் முதல் மனைவியின் ஒப்புதலுடன் இரண்டாவதாக வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதும் வாடிக்கை என்பதா? சாபக்கேடு என்பதா? இவர்களின் காதலுக்கு சாட்சியாக இரண்டு மகள்கள்.

எம்.ஜி.ஆரின் கண் பார்வையற்ற தங்கையாக 'எங்கள் தங்கம்' படத்தில் நடித்தார்.

சிவாஜிக்கு மகளாக பல படங்களில் நடித்தவர். அதே சிவாஜி கணேசனை வளர்த்து ஆளாக்கும் தாதியாகவும் 'வசந்த மாளிகை' படத்தில் நடித்தார். குறைந்த நேரமே தோன்றினாலும், கருணை பொங்கும் கண்களுடன் ஒரு இளம் விதவையாக, அன்பே உருவாகத் தோன்றுவார். அன்பு செலுத்துவதாலேயே ஜமீன்தாரினியால் (சாந்தகுமாரி) துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் துறப்பார். அந்தக் கொலையை நேரில் பார்க்கும் சிறுவன் வளர்ந்த பின்னும் தாய் மீது பிடிப்பற்றவனாக பெரும் குடிகாரனாக மாறுவான்.

ஜெமினி கணேசனுடன் இணையாக 'ராமு' படத்தில் கொஞ்ச நேரமே தோன்றினாலும் அவர்கள் இருவருக்குமான 'பச்சை மரம் ஒன்று இச்சைக்கிளி ரெண்டு' பாடல் பெரும் வெற்றி பெற்றது.

முத்துராமன், கல்யாண் குமார், சிவகுமார் என பலருடனும் இணைந்து நடித்தவர்.

கவிஞர் கண்ணதாசனின் தயாரிப்பில் வெளியான, 'தாயே உனக்காக' படத்தில் சிவகுமாருக்கு ஜோடி. போர் முனையிலிருந்து விடுமுறையில் திரும்பி வரும் வீரனாக சிவகுமாரும் அவரது காதலியாக புஷ்பலதாவும் நடித்திருந்தனர். இப்படம் ஒரு ரஷ்யப் படத்தின் தமிழ் வடிவம்.

வீட்டில் சித்தியின் கொடுமை தாங்காமல் வீட்டை விட்டுக் கிளம்பும் கதாநாயகி, ஒவ்வோர் இடமாகச் சென்று சேர்வதும் மீள்வதுமாக இருப்பார். நட்புக்காகப் பெரும்பாலான நட்சத்திரங்கள் நடித்திருந்தபோதும் அந்தப் படம் சரியாகப் போகவில்லை.

'கவிதா' என்றொரு படம் 60களில் வெளியானது. அதில் இளம் துப்பறிவாளராகப் பல்வேறு வேடங்களில் நம்பியாருடன் இணைந்து சாகசங்கள் செய்வார்.

70களிலேயே அம்மா வேடங்களுக்கு வந்தவர். பின்னர் கொடுமைக்கார மாமியார் வேடங்களையும் அவர் ஏற்கத் தயங்கவில்லை. புஷ்பலதாவைப் பொறுத்த வரை கதாநாயகியாக நடித்த படங்கள் என்பது மிகவும் குறைவு. ஆனால், துடுக்குத்தனமும் துணிச்சலும் நிறைந்த பெண்ணாகப் பல படங்களில் நடித்திருக்கிறார். திரையுலக வாழ்வின் இறுதிக் காலத்தில் தெலுங்கிலும் ஏராளமான படங்களில் அம்மா வேடங்களை ஏற்றார். ■

# ஒரு நாளாவது

அனு ஸ்ரீராம்

சிறுகதை

“எல்லா வீட்லயும் இப்படியா நடக்கும்? நானும் பொறுமையா இருக்கணும்னுதான் பாக்கிறேன். ஆனா முடியல. ஆபிஸ் விஷயமா ரூர் போக வேணாம்னு சொல்லல. ஆனா ஞாயிற்றுக்கிழமையாவது வீட்ல குடும்பத்தோட இருங்கனுதானே சொல்றேன்” சுதா அடுப்பில் பாத்திரத்தில் எதையோ கிளறியபடியே புலம்புவது காதில் விழுந்தது.

ரமணிக்கு சகல வார்த்தையும் நன்கு கேட்டும் பேப்பர் படிப்பதில் மும்முரமாய் இருந்தான். கம்பனியின் மார்க்கெட்டிங் மனேஜராக தென்னிந்தியாவுக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டதிலிருந்தே இப்படித்தான். ஹைதராபாத், பெங்களூர் என்று ஒவ்வொரு ஊராய்ப்போய் நிறையப்பேரைப் பார்த்துப் பேச வேண்டியிருந்தது. “நான் போய் பேசி முடியிற மாதிரி வேற யார் போனாலும் வேலை நடக்காது” னு சொன்னாலும் சுதா புரிந்து கொண்டாற்போல் தெரியவில்லை. இப்பவும் அப்படித்தான் இந்த புதன்கிழமை கிளம்பி பெங்களூர் போய் அடுத்த செவ்வாய்தான் சென்னை திரும்புவதாய் ப்ளான்.

‘மத்த நாள்னா பரவாயில்ல, ஞாயிற்றுக்கிழமைகூட நீங்க வெளியூர்ல இருந்தா நாங்க என்ன பண்றது. அதுக்கப்புறம் உங்க இஷ்டம்.’ சுதா முனகுவதற்கு முற்றுப்புள்ளி வைத்தாற் போல் இருந்தது.

கல்யாணமாகி பத்து வருஷ தாம்பத்தியத்தில் நிகில்னு ஏழு வயசில் ஒரு பையனும் சுமானு மூணு வயசில் ஒரு பொண்ணும் பிறந்தது ஏதோ இப்பதான் நடந்த மாதிரி இருந்தது ரமணிக்கு.



‘இவ ஏன்தான் இப்ப கல்யாணமான ஜோடி மாதிரி வீட்ல ஞாயிற்றுக்கிழமையானா கட்டாயமா இருக்கிறாங்களோ’. ரமணி பேப்பர் படித்து விட்டு ஆபிஸ் போக எழுந்தான்.

சென்ரரின் கூட்டத்தில் ரமணி நீந்தி ஒரு வழியாய் பிருந்தா வானில் ஏறி உட்கார்ந்தவுடனே சுதா சொன்னது ஞாபகம் வந்தது. ‘மேலாக ஸ்வெட்டர் வச்சிருக்கேன். ரெயின்ல குளிரினா போட்டுக்கோங்க’. பேப்பர் பையனும் பிஸ்கட் ட்ரேயும் ஜன்னல் வழியே தெரிந்தனர். ‘என்னதான் ப்ளேன்ல பறந்து சீக்கிரமா போலாம்னாலும் ரயில் பயணம் ஒரு ரம்மியமான சுகம்தான்’. ரமணி மனதில் நினைத்துக் கொண்டான்.

ரயில் மெதுவாக வேகமெடுக்கத் தொடங்கியது. ‘அடக்கடவுளே. ஸ்வெட்டர் மறந்துட்டேன் போலிருக்கே’ அருகிலிருந்தவர் குரல் கேட்டுத் திரும்பி பார்த்தான் ரமணி. அவருக்கு ஒரு நாப்பது வயதிருந்தால் ஜாஸ்தி. மெல்லியதாய் கண்ணாடி அணிந்திருந்தவரைப் பார்த்தால் மிக நல்ல சுபாவமாய் தோன்றியது. வளவளவென்று ‘இப்பல்லாம் எக்ஸ்பிரஸ் ரெயின் கூடுவாஞ்சேரியிலகூட நிக்கறதாம்’ என்று கதை அளக்கும் ரகமாய் தெரியவில்லை.

‘என்னோட சால்வையையும் போத்திக்கோங்க சார். சுதா எடுத்து வச்சிருப்பானு நினைக்கிறேன்’. ரமணி உடனடியாகப் பெட்டியை திறந்து எடுத்துக் கொடுத்தான்.

‘இல்ல பரவாயில்ல கொஞ்ச நேரம்தானே’. அவர் தடுத்தார். ‘அதனால என்ன. குளிர் ஜாஸ்தியா இருக்கு. உங்களுக்கு கஷ்டமாயிருந்தா நான் வேணா ஒரு ரெண்டு ரூபா சார்ஜ் பண்றேன். இறங்கும்போது கொடுத்தா போதும்.’ ரமணி சிரித்துவிட்டு அவரிடம் சால்வையைக் கொடுத்தான்.

‘தாங்ஸ், சார். அவசரமா கிளம்பினதுல மறந்துட்டேன். இந்து இருந்திருந்தா...’ சொல்ல வந்ததை பாதியில் நிறுத்தினார்.

‘பாருங்க. இன்னும் நம்ம சார்லயே இருக்கோம். என் பேர் ரமணி.’ அவர் நிறுத்தியதைக் கவனிக்காதது போல் கைகொடுத்தான் ரமணி.

‘நான் வெங்கடேஷ். நீங்க பெங்களூரா?’

‘இல்ல சென்னைதான். கம்பனி விஷயமா ஒரு வாரம் பெங்களூர் போறேன். நீங்க’?

‘நானும் சென்னைதான். ஆபிஸ் வேலையா பெங்களூர் போய்ட்டு ரெண்டு நாள்ல திரும்பிடுவேன்’.

‘நீங்க பரவாயில்ல வெங்கடேஷ். வீகென்ட் குடும்பத்தோட இருக்கலாம். என் பொண்டாட்டிக்கு அதுதான் கஷ்டமாருக்கு. வாரத்தில கிடைக்கிறதே ஒரு நாள். அதிலயும் நீங்க ஒரு ஊர்ல நானும் குழந்தைகளும் ஒரு ஊர்லயானு புலம்பறா’ ரமணி சொன்னான்.

‘அவங்க சொல்றதும் சரிதான் ரமணி. எங்க வெளில போனாலும் ஒரு நாளாவது குடும்பத்தோட சேர்ந்து சிரிச்சி பேசி ஒண்ணா சாப்பிடுற சுகமே தனி’.

‘என்ன வெங்கடேஷ் பண்றது. பிஸினஸ் விஷயமா யாரையாவது பாத்தா சனி, ஞாயிறுலதான் லஞ்ச், டின்னர்னு ஒண்ணா வெளில போக வேண்டியிருக்கு. அப்பதான் வேல முடியுது’.

‘இல்ல ரமணி. நான் அதுக்காக எல்லா சனி, ஞாயிறும் வீட்ல இருங்கனு சொல்லல. ஆனா இந்த மாதிரி டூரிங் பண்ற எல்லாரும் ஒரு நிமிஷம் ‘நம்ம குடும்பத்தோடு க்வாலிட்டி டைம்னு செலவு பண்ணி எவ்ளோ நாளாகுதுனு அப்பப்ப யோசிக்கிறது நல்லது. ஏன்னா சம்பாதிக்கிறதே மனைவி குழந்தைகள்னு சந்தோசமா இருக்கத்தான்.’

‘தெளிவா பேசுறீங்க நீங்க. உங்க பாமிலி மெம்பர்ஸ் கொடுத்து வச்சவங்க தான்.’ ‘இல்ல ரமணி, என் குடும்பத்தில உள்ளவங்க கொடுத்து வச்சவங்க இல்ல.’ ‘ஏன் அப்படி சொல்றீங்க நீங்க.’ ரமணி திகைத்தான். ஒரு பெருமூச்சுடன் தொடங்கினார் வெங்கடேஷ்.

‘என்னோடது ரொம்ப அழகான குடும்பம் ரமணி. என் மனைவி இந்துமதி, குழந்தைகள் வருண், சுலக்ஷனா. ரொம்ப சந்தோஷமாயிருந்தோம். அப்பா அம்மா பாத்து வச்ச கல்யாணம் தான்னாலும் ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கிட்டு வாழ்ந்தோம் ரமணி. நானும் இந்த மாதிரி டூரெல்லாம் போய்ட்டு வருவேன். எத்தனையோ ஞாயிற்றுக்கிழமைகள்ல நான் வெளியூர்ல இருந்திருக்கேன். ஒரு வருஷம் முன்னாடி செகந்திராபாத் ஒரு மீட்டிங்னு நாலு நாள் தங்க வேண்டியதாய் போச்சு’ வெங்கடேஷ் தொடர்ந்தார்.

‘இந்துக்கு இதுவரைக்கும் ஒண்ணுரெண்டு தடவை காய்ச்சல்னு தான்நான் டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போயிருக்கேன். எங்க ரெண்டு குழந்தைகள்கூட நார்மல் டெலிவரிதான்.

ரமணி மனதிற்குள் கவலைப்படத் தொடங்கினான். ‘அவ ரொம்ப ஆக்டிவா இருப்பா. அந்த சன்டே குழந்தைகள் ரெண்டு பேரும் வீட்டுக்கு வெளில விளையாடிட்டு இருந்திருக்காங்க. சாயங்காலம் நாலு மணிக்கு அவங்களுக்கு டிபன் பண்ணி கொடுத்திருக்கா.’

‘அஞ்சு மணிக்கு வருண் தண்ணி குடிக்க வந்து பாத்தப்போ, இந்து படுக்கையில படுத்துட்டு இருந்ததைப் பார்த்திருக்கான். அம்மானு கூப்பிட்டு பதிலில்லாம போனதினால கிட்டக்க வந்து பாத்து உடம்பு சில்லுனு இருக்கறதைப் பாத்து கத்தியிருக்கான். பக்கத்து வீட்ல இருக்கவங்க டாக்டரைக் கூப்பிட்டு பாக்க சொல்லும் போது எதுவுமே மிச்சமில்ல, ரமணி.’ ரமணிக்கு இதயம் கனக்கத் தொடங்கியது.

‘நான் விஷயம் தெரிஞ்சு வீட்டுக்குப் போனப்போ அவள தரையில் படுக்க வச்சிருந்தும் குழந்தைங்க ரெண்டும் ஒவ்வொரு பக்கம் அழுதுட்டு நின்னதும் என்னால மறக்கவே முடியாது.’

‘எப்படி வெங்கடேஷ் நடந்தது இது.’

‘உடம்புல உள்ள ரத்தமெல்லாம் மூளைப் பக்கமா திசை திரும்பி ஓடும்போது, அந்த ப்ரெஷர் தாங்க முடியாம ரத்த நாளங்கள் வெடிச்சிருக்கு. டாக்டர் இத ‘ஒன்னு இல்ல மில்லியன் கேஸ்னு’ சொன்னார்.

எல்லாமே ஒரு அஞ்சு நிமிஷத்துல முடிஞ்சிருக்கு.’ ‘ஒரு வேள நான் அவ பக்கத்துல இருந்து தண்ணி கொடுத்து உடனே டாக்டரைக் கூப்பிட்டிருந்தா அவளக் காப்பாத்தியிருக்கலாமோ என்னவோ. இன்னிக்கு என் பொண்ணு அம்மா இல்லாம தானா தலைய வாரி பின்னிக்கிட்டு ஸ்கூல் போகிறத பாத்தா, இப்படி ஊர் ஊரா போய் சம்பாதிச்சு என்னத்த சேத்தோம்னு தோணுது ரமணி.’

வீடு, குழந்தைகள்னு இருந்த என் பொண்டாட்டியோட சாவுக்கு நான்தான் காரணமாயிட்டேனோன்னு மனசுல ஏதோ ஒண்ணு அரிச்சுக்கிட்டேயிருக்கு. ‘என் குழந்தைகளையாவது ஒரு குறையும் இல்லாம பாத்துக்கணுமேன்னுதான் என்ன ஆனாலும் வீகென்ட்ஸ்ல வீட்டுக்குப் போயிடுறேன்.’ ரமணிக்கு யாரோ தன் மேல் ஒரு சுமையை இறக்கி வைத்தாற் போலிருந்தது.

‘கண்டிப்பாக சென்னையில் வீட்டுக்கு பசங்களக் கூட்டிட்டு வாங்க வெங்கடேஷ்’. பெங்களூரில் இறங்கும்போது முகவரிகள் கைமாறின.

பெங்களூரில் கம்பனியை பாதிக்காத வகையில் தன் திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது ரமணிக்கு. ‘நான் சனிக்கிழமை ராத்திரி எட்டு மணிக்கு வீட்டுக்கு வந்திடுவேன். சன்டே எல்லாரும் கிஷ்கிந்தா போலாம். சந்தோஷந்தானே. குழந்தைகள் கிட்டயும் சொல்லு’ போனை வைத்ததும் நிம்மதியாக இருந்தது ரமணிக்கு.

**(முற்றும்....)**

# இரு மலர்கள்

யாழ் சத்யா

தொடர்கதை

மலர் 42

கவியோ வேலை நேரத்தில் தன்னை மறந்து அந்த பாவப்பட்ட தமிழ் மக்களின் பிணி தீர்க்கும் முயற்சியில் தன்னை மறப்பாள். ஆனால், மீதி நேரம் முழுவதும் எங்கே தனது வேதனை தன்னைச் சுற்றி இருப்பவர்களை இன்னும் அதிகமாய் வேதனைப்படுத்துமோ என்ற கவலையில் உள்ளுக்குள்ளேயே குமைந்து தினந்தோறும் தலையணையை நனைத்துக் கொண்டிருந்தாள். “அக்கா...” அருண்யாவின் மென்மையான அழைப்பில் தன் சிந்தனை கலைந்து நிஜத்துக்கு வந்தாள்.

“என்னக்கா... இண்டைக்கு வேலை கூடவா? ரொம்ப டயர்ட்டா இருக்கிறாய்... சாப்பாடு எடுத்து வைக்கவா? நானும் இன்னும் சாப்பிடேல்ல... வாவன்”

“ஏன் அருண் இன்னும் சாப்பிடாமல் இருக்கிறாய்... சரி சரி வா” என்றவாறு சமையலறையை நோக்கி விரைந்தாள். தங்கை தான் உண்ணாமல் உண்ண மாட்டாள் என்பதை அறிந்தும் தூங்கி விட்ட தன் மடத்தனத்தை திட்டிக் கொண்டே தனக்கும் தங்கைக்குமாய் உணவை எடுத்து சாப்பாட்டு மேசையில் வைத்தவள் அருணியும் வர இருவருமாய் பேசிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள்.

“அம்மா சாப்பிட்டாவா? நான் அம்மாவையும் போய் பார்க்கேல்ல இன்னும்.”

“ஓமக்கா, இன்றைக்கும் திரெப்பி செய்யமாட்டேன் என்று அடம்பிடிச்சா, பின்னேரம் அப்பா வீல் செயாரில் வைத்து பிள்ளையாரடி கோயில் வரை கூட்டிக் கொண்டு போய் வந்தவர்.”

“ஹூம்... நல்லது. அம்மாவை அடிக்கடி வெளியே கூட்டிக் கொண்டு போக வேணும்... நீயும் போனால் எவ்வளவு நல்லது”

“இப்ப என்ர கதையை விடக்கா. நீ ஏன் இன்றைக்கு சரியான அப்செட்டாக இருக்கிறாய்? ஆஸ்பத்திரியில ஏதும் பிரச்சினையோ?”

“அப்பிடியெல்லாம் ஒண்டுமில்லை. கொஞ்சம் பேசன்ட்ஸ் அதிகம், வேலைகூட. சரியான அலுப்பு அதுதான் நித்திரையாப் போனன். அதை விடு அருண்... இண்டைக்கு ஸாமைப் பார்த்தன் ஹொஸ்பிடல் வந்திருந்தார். நேற்றும் வந்தவர் நான் கதைக்கேல... இண்டைக்குத்தான் கதைச்சனான்”

“என்ன ஸாம் ஸேரோ? லண்டனால வந்திட்டாரோ? எப்பிடி இருக்கிறார் அக்கா? என்ன சொன்னார்? நம்ம கதையெல்லாம் தெரியுமா?”

“அப்பிடியேதான் இருக்கிறார். கொஞ்சம் தாடி வளர்த்திருக்கிறார். அது வந்து, என்ர விசயம் அவரிட அண்ணா சொல்லி இருக்கிறார் போல. அது தெரிஞ்சதும் வந்து தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்லிக் கேட்டார்”

“ஸேர் என்றால் ஸேர்தான்... பார்த்தியாக்கா அறிஞ்ச உடன உன்னைப் பார்க்க வந்திட்டார், நீ என்ன சொன்னாய் அக்கா?”

பல வருடங்களின் பின்னர் பழைய துள்ளலோடு ஒலித்த தங்கையின் குரலை அதிசயமாய் பார்த்தாள் கவி.

அந்தச் சம்பவத்தின் பின்னர் தனக்குள்ளேயே ஒடுங்கி பழைய கலகலப்பு, கேலி, துள்ளல், துடுக்குத்தனம் எதுவுமின்றி தன் சுட்டித்தனம், குறும்பெல்லாம் மறந்து தேவைக்கு மட்டுமே வாயால் வார்த்தைகளை உதிர்த்து ஒரு நடைப் பிணமாக வாழ்ந்த அருண்யாவின் முகத்தில் ஸாமின் பெயரைக் கேட்டதுமே வந்த மலர்ச்சியை தனக்குள்ளேயே குறித்துக் கொண்டாள் அந்த பாசக்கார சகோதரி.

“என்னக்கா யோசிச்சிட்டு இருக்கிறாய்? ஸேர் கேட்டதுக்கு என்ன சொன்னாய்?”

ஆவலாய் விசாரித்தவளுக்கு விரக்தியாய் பதிலிறுத்தாள் கவின்யா.

“நான் என்ன சொல்ல அருண்? என்ர யாதுவை மறந்து என்னால எப்பிடி இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியும்? மாட்டன் என்று சொல்லிட்டன்”

“ஹூம்... ஆனால் அக்கா சொல்லுறனே என்று கோபிக்காதை, யாதவ் அத்தானுக்காக இன்னும் எவ்வளவு காலம்தான் காத்திட்டு இருக்கப் போறாய்? ஸாம் ஸேர் என்றால் எல்லாம் தெரிஞ்சவர்... உன்னை ரொம்ப புரிஞ்சு கொண்டவர்... உன்னை நல்லாப் பார்த்துக் கொள்ளுவாரக்கா”

“அதெல்லாம் சரி அருண்... ஆனால், என்னால யாதவ மறந்து அது ஸாமே ஆனாலும் கல்யாணம் பண்ணேலாது, யாதவ் எப்பிடியும் திரும்ப வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு அருண். நீ பட்ட கஷ்டம் என்ர வாழ்க்கைக்காக நீ ரிக்ஸ் எடுத்து உன்ர வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டது எதுவும் வீணாகாது அருண்... நிச்சயமாக யாது திரும்ப வருவார்”

உணர்ச்சி பொங்கக் கூறிவிட்டு விழிகளில் துளிர்த்த நீரை தங்கைக்குத் தெரியாமல் உள்ளிழுத்து மறைத்தபடி சாப்பிட்ட தட்டைக் கழுவுவதற்காக சமையலறைக்கு எடுத்துச் சென்றாள்.

தமக்கை எழுந்து செல்வதையே பார்த்த படி தட்டில் மீதியிருந்த உணவை அளைந்தவளின் கண்களிலும் கண்ணீர் துளிகள்.

தனது தட்டைக் கழுவி வைத்து விட்டு வந்த கவி இன்னமும் தங்கை தட்டையே அளைந்து கொண்டிருப்பதைப் பார்த்தவள்,

“அருண்... சாப்பிட்டு முடிஞ்சால் போய்க் கையைக் கழுவு”

“சரிக்கா...”

‘என்மேல் எவ்வளவு பாசம் இருந்திருந்தால் இப்படி எனது வாழ்க்கையைக் காப்பாற்றுவதற்காக இப்படி தன் வாழ்க்கையே இழந்திருப்பாள் இவள்... கடவுளே எங்கள் வாழ்வில் இத்தனை இழப்புகளை சந்தித்த பின்னும் உன்னை நம்புகிறேன், இவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடு... இந்த இளம் வயதிலேயே நடைப் பிணம் ஆக்கி விட்டாயே... எங்கள் பழைய அருண் எங்களுக்கு கிடைப்பாளா?’

அப்பிளை துண்டுகளிட்ட படியே கடவுளிடம் வேண்டி முடித்தவள் தங்கையின் பக்கமும் பாதியைத் தட்டில் வைத்து நீட்டியபடி “அக்கா..” என்றழைத்தவளின் குரலில் தங்கையை நோக்கினாள்.

“அக்கா... எனக்கு ஸேரைப் பார்க்கணும் போல இருக்கு... இங்க எவ்வளவு நாள் நிக்கிறாரோ தெரியேல்ல... நாளைக்குப் பின்னேரம் அவரிட வீட்ட போய்ப் பார்க்கவா?

லண்டன் போன தொடக்கத்தில என்னோட கதைச்சவர்... பிறகு ஒரு தொடர்பும் இல்லை... அந்தோணி அங்கிள் இறந்தப்ப கூட வரேல்ல... பேஸ்புக், ருவிட்டர், ஈமெயில் எதுவும் இல்லை.. அப்படி என்ன தலைமறைவு வாழ்க்கை வாழுறார் என்று சண்டை போடணும்...”

பழைய அருணியின் துடுக்குத் தனம் தலை தூக்க ஆவலாய்க் கேட்டவளிடம் மறுக்கவா போகிறாள் கவி? ஆனால், அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை. காரணம் பத்து வருடங்ளாக அஞ்ஞாதவாசம் புரிபவள் முதல் முதலாக வீட்டுப்படி தாண்டி வெளியே போய் ஸாமை சந்திக்க விரும்புவதை எண்ணி அதிசயித்தாள். இதிலிருந்தே அவள் ஸாம் மீது வைத்திருக்கும் பாசத்தை உணர்ந்து கொண்டாள்.



அருண்யா ஸாமை சந்திக்க முதலே தான் ஸாமை சந்தித்து அருணி பற்றிய உண்மைகளைத் தெரியப்படுத்தினால் ஸாம் அவளைக் கொஞ்சம் மாற்ற முயலுவான். இவள் வேறு இன்னமும் அவன் பெயர் கேட்டால் முன்பு மாதிரியே ஸேர் ஸேர் என்று உருகுகிறாளே. சிலவேளை இத்தனை வருடங்கள் கழித்து அருணியின் வாழ்வில் ஒளியேற்றத்தான் கடவுள் ஸாமை அனுப்பி வைத்தாரோ? எல்லோரது வேண்டுதல்களும் வீண்போகவில்லையோ?

மனதில் பல சிந்தனைகளோடு தூங்கியெழுந்தவள் காலையில் கொஞ்சம் சீக்கிரமாகவே வேலைக்குத் தயாராகிப் போகும் வழியில் ஸாமின் வீட்டிற்குச் சென்றாள்.

இவள் வெளியே நின்று கூப்பிடவும் ஸாமே வந்து கதவைத் திறந்து அவளை உள்ளே அழைத்து உபசரித்தான். அவனது இரண்டாவது அண்ணி தேநீரோடு வர இருவரும் எடுத்து பருகிக் கொண்டே கேள்வியாய் கவியை நோக்கினான் ஸாம்.

இருமிடறு அருந்திவிட்டு,

“ஸாம்... உங்களிட்ட ஒரு முக்கியமான விசயம் சொல்லோணும், அருண் இண்டைக்கு உங்களைப் பார்க்க வரப்போறன் என்று சொல்லியிருக்கா... அவ இப்ப முந்தி மாதிரி இல்லை... ரொம்ப மாறிட்டா... ஆனால், உங்கட பேரைக் கேட்டதும் அவ முகத்தில பழைய களை வந்துச்சு...

அதுதான் உங்களுக்கு முழு உண்மையும் தெரிஞ்சால் அவளை பழையபடி மாத்திறதுக்கு ஏதாவது செய்யலாமோ என்று, அதுதான் உங்களைப் பார்த்து கதைச்சிட்டுப் போகலாம் என்று” கவி கூறியதைப் பதைப்புடன் கேட்டவன் விடயம் கொஞ்சம் பாரதூரமானது என்பதைப் புரிந்து கொண்டு,

“கவி... நான் உங்கட ஹொஸ்பிடல் குவாட்டர்ஸ்க்கே நேற்று மாதிரி வந்திடுறன்... எத்தனை மணிக்கு வந்தால் உங்களுக்கு ஓகே?”

“ஒரு மணிக்கு என்ர லஞ்ச் டைமுக்கு வந்திடுங்க... ரொம்ப தாங்ஸ் ஸாம்” கூறி விட்டு எல்லோரிடமும் விடைபெற்று வைத்தியசாலைக்குச் சென்றாள்.

அருண்யாவின் மாற்றத்திற்கு என்ன காரணம்? **(மலரும்....)**




# வவுனியாவில் புத்தகக் கொண்டாட்டம்

**தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியா நகரசபை பொது நூலகமும் பண்டார வன்னியன் புத்தகசாலையும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமையும், 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.**

**காலை 8 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் புத்தக அறிமுகங்களும் நடைபெற உள்ளது.**




# மூங்கிலாற்றில் வியக்கவைக்கும் கவிதை நூல் வெளியீட்டு விழா!



முல்லை மண்ணில் தமிழோடு மலர்ந்த கவிதாயினி அபிவர்ணாவின் "வில்லோடு வா வெண்ணிலா" என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா கிராம அபிவிருத்தி சங்க வளாகத்தில் கவிஞர் யாழ் மருதன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக.சி.ஜெயகாந்த் பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு சிறப்பு விருந்தினர்களாக ஞா.ஞானசொரூபன், வை.நவதரன், உடுவிலூர் கலா, க.கிறிஸ்ரியன், ஜெனாட் நியூமன், ந.சிவசுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக பு.நகுலன், எஸ்.சிவகரன், கலாபூசணம் ந.இராமநாதன், அலெக்ஸ் பரந்தாமன் ஆகியோர் கலந்து கொண்டனர். யோ.புரட்சி ஆய்வுரை நிகழ்த்தினார்.






# அவுஸ்திரேலியா சிட்னியில் 23 ஆவது தமிழ் எழுத்தாளர் விழா

புலம் பெயர்ந்த தமிழர்கள் தம்முடன் தமது இயல்புகளையும் அழைத்துச் சென்றிருந்த போதிலும் இவர்கள் மத்தியில் கலை, இலக்கிய உணர்வுள்ளவர்கள். அந்த இயல்புகளுக்கும் அப்பால், அடுத்த தலைமுறையின் தேவை கருதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழின அடையாளம் பேணப்படவேண்டும் என்ற கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் பணிகள் ஒருபுறம் மேற்கொள்ளப்படும் அதேசமயம் புகலிட இலக்கியத்தை ஆரோக்கியமான திசையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பிரயத்தனமும் நீட்சி பெற்றுள்ளது.

"அறிந்ததைப் பகிர்தல், அறியாததை அறிந்து கொள்ள முயல்தல்" என்ற சிந்தனையை முன்னிறுத்தி 2001 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் தொடங்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் விழா இயக்கம், பின்பு ஆண்டுதோறும் மாநிலங்களில் முன்னெடுக்கப்பட்டது.

கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் மெய்நிகர் வழியாக நடைபெற்ற எழுத்தாளர் விழா, இம்முறை சிட்னியில் இம்மாதம் 10 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு, நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தில், சிட்னியில் தூங்காபி சமூக மண்டபத்தில் ஆரம்பமாகிறது.



அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தினால் (Australian Tamil Literary & Arts Society) ஒழுங்கு செய்யப்படும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக Cumberland City Council மேயர் லிஸா லேக் மற்றும் Strathfield City Council மேயர் கரன் பென்சபென் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

மெல்பன், சிட்னி, கன்பரா, குவின்ஸ்லாந்து மாநகரங்களில் வதியும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், வானொலி ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடும் இவ்விழாவில், இம்முறை ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக படைப்பிலக்கியத்துறையில் ஈடுபட்டு வருபவரும் தமது நூல்களுக்கு இலங்கையில் தேசிய சாகித்திய விருதுகள் உட்பட பல இலக்கிய விருதுகளையும் பரிசில்களையும் பெற்றிருப்பவருமான எழுத்தாளர் தாமரைச்செல்வி பாராட்டி கௌரவிக்கப்படவிருக்கிறார்.

எழுத்தாற்றல் மிக்க மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றும் தமிழ் மாணவர்கள் தமிழையும் ஒரு பாடமாக கற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்குந்தது.

அவர்களுக்கு உசாத்துணையாக அவுஸ்திரேலியாவில் இதுவரையில் வெளிவந்த தமிழ் இலக்கிய நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள் என்பனவற்றின் கண்காட்சியும் இவ்விழாவில் இடம்பெறவிருக்கிறது. இக் கண் காட்சியை பிரதம விருந்தினர்கள் திறந்து வைப்பார்கள்.

அவுஸ்திரேலியாவில் வதியும் தமிழ் படைப்பாளிகள் இந்த வருடம் வெளியிட்ட புதிய நூல்கள் பற்றிய வாசிப்பு அனுபவப் பகிர்வு நிகழ்ச்சியும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

மலையகம் 200 என்னும் தலைப்பில் கருத்தரங்கும் நடைபெறும்.

விழாவின் இறுதி நிகழ்ச்சிகளாக குறும்படக்காட்சியும் இசைக்கலைஞர் அருண்.குமாரசாமியின் இசையரங்கும் இடம்பெறும்.

அனுசரணை : சிட்னி தமிழ் வளர்ச்சி மன்றம்

Cumberland Council, Wentworth Ville Library. ■




ADVERTISEMENT


GAANAAMRUTHAM
FINE ARTS ACADEMY
Proudly presents
the
Vocal Arangetram
of
Amirthaa
Muraleetharan
Aarthie
Muraleetharan
Disciples of
Smt. Aathirai Sivapalan-Roshan
GAANAAMRUTHAM
FINE ARTS ACADEMY
Mr. and Mrs. Muraleetharan
Cordially invite you and your family to the
Vocal Arangetram of their daughters
Amirthaa
&
Aarthie
On Saturday, September 9th, 2023 at 4:00 PM
Richmond Hill Centre for the Performing Arts
10268 Yonge St, Richmond Hill, ON L4C 3B7
Refreshments from 4:00 PM to 5:00 PM
Program Commences at 5:00 PM
Scan QR Code to RSVP
SNAP ME

# சமையலில் வெங்காயத்தை ஏன் தவிர்க்கக் கூடாது?

வெங்காயத்தில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் நச்சுகளை அழிக்க உதவுகிறது. சமைக்காத வெங்காயத்தைச் சாப்பிடுவதால், உடலுக்கு விற்றமின் சி கிடைக்கும். இதில் வலிமை தரும் மினரல்ஸூம் ஏராளமாக இருக்கின்றன.

சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம் இரண்டிற்க்கும் பொதுவான குணங்கள் நிறைய உண்டு. ஆனால், பெரிய வெங்காயத்தைவிட சிறிய வெங்காயத்தில் வீரியம் அதிகம்.

**சிறிய வெங்காயம்:**

சிறிய வெங்காயத்திலிருந்து 5 மில்லி அளவுக்கு அரைத்து எடுத்த சாற்றை, மோர் அல்லது தேனோடு கலந்து தினமும் குடித்தால், அதிகபடியான கொழுப்பால் ஏற்படும் இதய அடைப்புப் பிரச்சினையிலிருந்து நிச்சயம் தற்காத்துக் கொள்ளலாம். இதனால்தான், பழைய சோற்றுக்குச் சிறிய வெங்காயம் என்ற காம்பினேஷன் உருவானது. இயற்கை மருத்துவத்தில் இது மிகப் பெரிய வரப்பிரசாதம்.

தாளித்து அல்லது வேகவைத்துச் சாப்பிடுவதைவிட, சமைக்காமல் அப்படியே பச்சையாகச் சாப்பிடும்போது வெங்காயம் மிகச் சிறந்த மருத்துவப் பொருளாகச் செயல்படுகிறது. மேலும், இது ஜீரண சக்தியையும் வலுப்படுத்துகிறது. கோடைக் காலத்தில், சிறிய வெங்காயத்தை அதிகளவில் உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. சைனஸ், ஆஸ்துமா போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அளவோடு சாப்பிட வேண்டும் என்பதைக் குறித்துக்கொள்ளவும்.

**பெரிய வெங்காயம்:**



பல்லாரி அல்லது பெரிய வெங்காயத்தில் வீரியத்தன்மை குறைந்திருக்கும். இது இரத்தத்தில் இருக்கக் கூடிய நச்சுகளை வெளியேற்றுவதற்கு உதவி செய்கிறது. அதிகபடியான உணவு வகைகளைச் சாப்பிட்டாலும்கூட, இந்த வெங்காயம் சிறிதளவு சாப்பிட்டால் எளிதில் ஜீரணமடையும். பெரிய வெங்காயத்துடன், தக்காளி, கோஸ் போன்றவற்றைச் சேர்த்து சலட்டாகச் செய்தும் சாப்பிடலாம்.

“வெங்காயம் குறைந்த கலோரி உணவுப் பொருள். காய்கறிகளோடு சேர்த்துச் சாப்பிடும் போது, அதன் சக்தி மேலும் அதிகரிக்கிறது. இப்போதெல்லாம் வெங்காயத்துக்குப் பதிலாக, முட்டை கோஸைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிச் செய்யும்போது சுவையைச் சரிப்படுத்த முடியுமே தவிர, வெங்காயத்தின் பிரத்யேக ஊட் டச்சத்து உணவில் சேராமல் போகும். என்ன உணவாக இருந்தாலும், சிறிதளவு வெங்காயம் சேர்த்தால் மட்டுமே அதன் சக்தி உடலைச் சென்றடையும்.

**சிறிய வெங்காயம்:**

புரதச்சத்து - 1.8 கிராம், நார்ச்சத்து - 1.2 கிராம், கார்போஹைதரேட் - 11.5, எனர்ஜி - 57 கிலோ கலோரிகள்.

**பெரிய வெங்காயம்:**

புரதச்சத்து - 1.5 கிராம், நார்ச்சத்து - 2.5 கிராம், கார்போஹைதரேட் - 9.5 கிராம், எனர்ஜி-48 கிலோ கலோரிகள்.

சர்க்கரை நோய், இதயப் பிரச்சினை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களும்கூட தாராளமாகச் சாப்பிடலாம்.

சிறுநீரகக் கோளாறு, அல்சரால் அவதிப்படுபவர்கள் வெங்காயத்தை பச்சையாகச் சாப்பிடுவதைத் தவிர்க்கலாம். இதுபோன்ற சில உடல்நலக் காரணங்கள் மற்றும் விருப்பத்தைப் பொறுத்து வெங்காயத்தைச் சமையலில் குறைத்துக்கொள்ளலாம், ஆனால், தவிர்க்கக் கூடாது. ■

---

# அல்சருக்கான உண்மையான காரணம்

மூன்று வேளையும் ஹோட்டல் உணவுகளைச் சாப்பிடுவதால் அல்சர் ஏற்படலாம் என்ற நம்பிக்கை தவறானது. ஹோட்டலில் சுகாதாரமற்ற உணவுகள் வழங்கப்படும்போது அதைச் சாப்பிட்டால் ஃபுட் பாய்சன் ஏற்படலாம். வயிற்றுப் பிரச்சினை என்றாலே அல்சர் என்று நினைத்துவிடக் கூடாது.

அல்சர் என்கிற வயிற்றுப்புண், பொதுவாக யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படக் கூடிய ஒன்று. அல்சர் ஏன் ஏற்படுகிறது என்பது பற்றிய தவறான நம்பிக்கைகள் நம்மிடையே நிலவுகின்றன. நேரத்துக்குச் சாப்பிடாமல் விட்டால் வயிற்றில் அமிலம் சுரந்து அது இரைப்பைச் சுவர்களைப் புண்ணாக்கி அல்சர் ஏற்படும் என்றும் காரமான உணவுகளைச் சாப்பிட்டால் அல்சர் வரும் என்றும் இன்னும் சில நம்பிக்கைகளும் நம்மிடையே இருக்கின்றன.

இவையெல்லாம் உண்மையா? அல்சர் ஏற்படுவதற்கான உண்மையான காரணங்கள் என்னென்ன?

“ஹமருத்துவ அறிவியல் அசுர வளர்ச்சி கண்டிருக்கும் இன்றைய சூழலில் அல்சர் பாதிப்புக்கு உள்ளாகுபவர்களின் விகிதம் குறைந்திருக்கிறது. அப்படியே அல்சர் வந்தாலும், அதற்கு பயப்படத் தேவையில்லை. அல்சரை மிக எளிதில் குணமாக்க முடியும். என்ன இருந்தாலும் வராமல் தற்காத்துக்கொள்வதுதான் நல்லது என்பதை மனதில் கொள்ளுங்கள்.

அல்சர் குறித்த தவறான நம்பிக்கைகள் நம்மிடையே நிலவுகிறதுதான். காரமான உணவுகளைச் சாப்பிட்டால் அல்சர் வந்துவிடும் என பயப்படுகிறார்கள். வட இந்தியாவில் எல்லாம் ரொட்டி, சாப்பாடு எது சாப்பிட்டாலும் பச்சை மிளகாயை எடுத்துக் கடித்துக்கொண்டு சாப்பிடுவார்கள்.

உண்மையில் காரமான உணவுகளைச் சாப்பிடுவது இரைப்பைக்கும் உடல் நலத்துக்கும் உகந்தது. வயிற்றுப்புண் வந்து விடுமோ என்கிற பயம் தேவையற்றது.

சாப்பிடாமல் விட்டாலோ, நேரம் கடந்து சாப்பிட்டாலோ வயிற்றில் அமிலம் அரித்து அல்சர் வரும் என்பதெல்லாம் தவறான நம்பிக்கை. வயிற்றில் செரிமானத்துக்காக சுரக்கும் அமிலத்தைத் தாங்கும் திறன் நம் இரைப்பைக்கு இருக்கிறது. ஆகவே, சாப்பிடாமல் இருந்தால் அல்சர் வராது, அசிடிட்டிதான் வரும். நேரம் கடந்து சாப்பிடுகையில் வயிற்றில் வழக்கத்துக்கும் அதிகமாக அமிலம் சுரந்து அது சாப்பிட்ட பிறகு இரைப்பையின் மேற்பகுதியில் வந்து தங்கும்போதுதான் அசிடிட்டி ஏற்படுகிறது. சில வேளைகளில் அந்த அமிலம் உணவுக்குழாய் வழியாக மேலே வந்து எரிச்சலை ஏற்படுத்தலாம். இதுதான் அசிடிட்டியின் விளைவுகள்.

**எதனால் அல்சர் ஏற்படுகிறது?**

மூன்று வேளையும் ஹோட்டல் உணவுகளைச் சாப்பிடுவதன் மூலம் அல்சர் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ஆளாகலாம் என்கிற நம்பிக்கையும் தவறானது. ஹோட்டலில் சுகாதாரமற்ற உணவுகள் வழங்கப்படும்போது அதைச் சாப்பிடுகையில் ஃபுட் பாய்சன் ஏற்படலாம். இதன் காரணமாக வயிற்றுப்போக்கு உள்ளிட்ட உபாதைகள் ஏற்படும். வயிற்றுப் பிரச்சினை என்றாலே அல்சர் என்று நினைத்துவிடக் கூடாது. பித்தப்பையில் கல் இருந்தால் பித்தம் சரியான அளவில் சுரக்காமல் போகும். இதனால்கூட வயிற்று வலி ஏற்படலாம்.



அப்படியென்றால் எதனால்தான் அல்சர் ஏற்படுகிறது என்றால், இரண்டே காரணங்கள்தான். H.pylori என்கிற பக்றீரியா தொற்றுதான் அல்சர் ஏற்பட முதன்மைக் காரணம். NSAID (Nonste roidal anti inflammatory drugs) அதாவது, காய்ச்சல் மற்றும் வலிகளுக்கு எடுத்துக்கொள்ளும் மாத்திரைகளால் அல்சர் ஏற்படும். மருத்துவர் பரிந்துரையில்லாமல் நாமாகவே மருந்தகத்துக்குச் சென்று மாத்திரை வாங்கிச் சாப்பிடும் சுய மருத்துவத்தின் விளைவு இது. இவை இரண்டும்தான் நேரடியான காரணங்கள்.

புகைபிடித்தல், தினசரி மது அருந்துதல், சாப்பிடாமல் தவிர்த்தல் ஆகியவை அல்சரை மறைமுகமாகத் தூண்டக்கூடியது. முழுநேரம் மது அருந்தக் கூடிய குடி நோயாளிகளுக்கு அல்சர் வர வாய்ப்பிருக்கிறது என்று சொல்ல முடியுமே தவிர அல்சர் வரும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அல்சர் ஒரு பக்றீரியா தொற்று என்பதைப் புரிந்துகொண்டாலே போதும்.

**அல்சர் உள்ளவர்கள் அவசியம் தவிர்க்க வேண்டிய உணவுகள், பானங்கள்!**

**அல்சரைக் கண்டறியும் முறை!**

ஒருவருக்கு அல்சர் இருப்பதை எண்டோஸ்கோபி செய்து பார்ப்பது, பயாப்சி எடுத்து ஆய்வு செய்வது மற்றும் அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்வதன் மூலம் கண்டறியலாம். அப்படியாக அல்சர் கண்டறியப்பட்டால் மருந்து, மாத்திரைகள் மூலமே குணப்படுத்திவிட முடியும்.

ஊட்டச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுதல், ஜங்க் உணவுகளைத் தவிர்த்தல், தேவையான அளவு தண்ணீர் குடித்தல், நன்றாகத் தூங்குதல் போன்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றினாலே, அல்சரை ஏற்படுத்தும் பக்றீரியாத் தொற்று ஏற்படாமல் தவிர்க்க முடியும். மருத்துவப் பரிந்துரையின்றி எந்த மருந்து மாத்திரைகளையும் உட்கொள்ளாமல் இருப்பதும் முக்கியம். ■

# நெல்லியடியில் IELTS வகுப்புகள்




## CALL - 077 168 68 95

# வல்லிபுர ஆழ்வார் ரவல்ஸ்

Vallipura Aalvar Travels

Happy & Comfortable Journey - All Island

Yugan

077 100 44 62

076 721 15 35

VAN FOR HIRE

Upayakathirkamam,

Puloly, Point pedro.







# தலைவர்களை புறம் தள்ளி...

(06 பக்கத் தொடர்ச்சி...)

இக்கோரிக்கை குறித்த விளக்கத்தை அதிகாரப் பகிர்வுக்கான இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் அகில இலங்கை தமிழர் மகாசபையின் தலைவருமான கலாநிதி கா.விக்னேஸ்வரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது எடுத்துக் கூறியதையடுத்து அதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்ததாகவும் தெரிய வருகிறது. இதனைச் செய்வதற்குப் புதிய சட்டமெதுவும் தேவையில்லை. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானமே போதுமானது.

இந்த நிலையில், மூல (அசல்) 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண பொலிஸ் ஆணைக்குழுவை நிறுவுவதாயின் அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படக்கூடிய மேலுமொரு (22 ஆவது) அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினாலேதான் சாத்தியம். இது உடனடியாகச் சாத்தியப்படாது. அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைக்கு பொலிஸ் அதிகாரங்கள் குறித்த விடயத்தைப் பேசு பொருளாக்காமல் அதை ஒத்தி வைத்துவிட்டு அதிகாரப் பகிர்வின் ஏனைய விடயங்களைப் பேசுவோம் எனக்கூறினார். அரசியலமைப்புக்கான திருத்தம் ஒன்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றும் வகையில் தற்போது பொதுஜன பெரமுன உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் பாராளுமன்றம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்டுப்பாட்டிலில்லையென்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள விரும்பாத 'போலி' த் தமிழ்த் தேசியவாதிகளும் அவர்களுக்குச் சாமரம் வீசுகின்ற சில தமிழ் ஊடகங்களும் 'யானை பார்த்த குருடர்கள்' மாதிரி ஆளுக்கொரு கதை கூறித் தமிழ் மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்கின்றனர். சட்டங்கள் தேவைதான். ஆனால், காரிய சித்திக்குச் சட்டங்கள் மட்டுமல்ல கால தேச வர்த்தமானங்களுக்கேற்பத் தந்திரோபாயமான அணுகுமுறைகளும் அவசியம். வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைத்து தமிழர்கள் பிரச்சினை ஒருபோதும் தீராமல் பார்த்துக்கொள்வது மட்டுமே இப் 'போலி' த் தமிழ்த் தேசியவாதிகளினது குறிக்கோள் ஆகும்.

தமிழ் மக்கள் எச்சரிக்கையுடனும் தெளிவுடன் நடந்து கொள்ள வேண்டிய தருணம் இது. எல்லாவற்றையும் எதிர்மறையாகவும் சந்தேகத்துடனும் நோக்கும் அணுகும் உளவியலிலிருந்து தமிழ் மக்கள் வெளியே வந்து அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்னும் பொன்மொழிக்கிணங்க சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் வல்லமையை வளர்த்துக் கொள்வது அவசியம். இதற்குப் 'போலி' த் தமிழ்த் தேசியவாதிகள் வழிகாட்டவும் மாட்டார் கள், வழிவிடவும் மாட்டார்கள். வழியும் விடாமல் பலனும் கொடாமல் நட்டநடு வீதியில் பட்ட மரமாகவே நிற்பர்.

தமிழ் மக்கள் தாமாகவே தெளிவடையவும் திருந்தவும் வேண்டும். வீழ்ந்து கிடக்கும் தமிழ் மக்கள் இருப்பதைப் பற்றிக் கொண்டு எழுந்து நிற்க எத்தனிக்க வேண்டும். அந்த எத்தனம் இல்லையாயின் காலம் முழுவதும் வீழ்ந்தபடியே கிடக்க வேண்டிவரும். அத்தகைய எத்தனத்தைத் தான் இவ் அரசியல் பத்தித்தொடர் எப்போதுமே 'மாற்று அரசியல்' என்று அடையாளம் காட்டி வருகிறது. இம்மாற்று அரசியலை முன்னெடுக்க வேண்டிய தலைமைத்துவப் பொறுப்பை வரலாறு அதிகாரப் பகிர்வுக்கான இயக்கத்தின் மீதே சுமத்தியுள்ளது. ■

# அதிர்ச்சி தந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் கூறப்படும் சந்திப்பின் போது தாம் மலேசியாவில் தங்கியிருந்ததாகவும் ஈஸ்டர் தாக்குதலின் போது இந்தியாவில் பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்றதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய நம்பகமான ஆதாரங்கள் இல்லாமல் தொடர்புடைய அறிக்கை நிகழ்ச்சியை ஒளிபரப்பினால் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்று நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் பென் டி பியரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய வீடியோவை ஒளிபரப்பிய இங்கிலாந்தின் சனல் 4, வீடியோக்களை அகற்றியுள்ளது. அதன் இணையதளம் உட்பட அனைத்து சமூக வலைத்தளங்களிலிருந்தும் சர்ச்சைக்குரிய வீடியோவை நீக்கியுள்ளது.

பிரித்தானியாவின் 'சனல் 4' செய்திச் சேவை வெளியிட்டுள்ள ஆவண தொகுப்பில் வெளியாகியுள்ள, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படுகின்ற பாரிய சூழ்ச்சி மற்றும் அதனுடனான சகல விடயங்களும் அதில் குறிப்பிடப்படுகின்ற நபர்கள் தொடர்பிலான விசாரணையொன்று சுயாதீன சர்வதேச விசாரணைக்குழு ஒன்றின் மூலமாக நடத்தப்பட வேண்டும் என கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

இந்த விசாரணை சுயாதீனமான முறையில் நடத்தப்பட வேண்டுமானால், இந்த விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற மற்றும் தற்போதும் புலனாய்வு பிரிவுக ளைப் போலவே பொலிஸ் திணைக்களங்களில் உயர் பதவிகளில் இருக்கின்ற சகல அதிகாரிகளினது சேவைக்காலம், இந்த விசாரணை முடிவடையும் வரையில் இடைநிறுத்தப்பட வேண்டும் என மேலும் குறிப்பிட்டார்.

தற்போது வெளியாகியுள்ள 'சனல் 4' செய்திச் சேவை ஆவணத் தொகுப்பில் வெளியாகியுள்ள விடயங்கள் தொடர்பில் இந்நாட்டு மக்கள் அனைவரும் தங்களது கவனத்தை செலுத்துமாறும் பேராயர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

பிரித்தானியாவின் 'சனல் 4' செய்திச் சேவை வெளியிட்டுள்ள ஆவணத்தொகுப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் ஊடக சந்திப்பொன்று கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே கர்தினால் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குலக ஊடகங்கள் இலங்கையின் கொலைக் களம் குறித்த ஆவணப்படத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகளையும் ஆய்வுகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும் நிலையில், இலங்கை அரசாங்கமோ சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய ஆவணப்படம் போலியானது என்றே தொடர்ந்தும் குறிப்பிட்டு வருகிறது. ஆவணப்படம் வெளியானவுடன் இதுதொடர்பில் அறிக்கை வெளியிட்ட பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகம், குறித்த காட்சி போலியானதென வர்ணித்திருந்தது டன், காட்சிகளில் திட்டமிட்டு படுகொலை செய்யப்படுவதை அவதானிக்க முடிவதாகவும் சில சர்வதேச ஊடகங்கள் சிலரை திருப்திப்படுத்தும் நோக்குடன் செயற்படுவதாகவும் கவலை வெளியிட்டிருந்தது.

முன்னாள் கோட்டபாய ராஜபக்ஷ சனல் 4 ஆவணப்படம் வெளியானவுடன் குறித்த படம் புலிகளின் பணத்தில் மேற்கொள்ளப்பட்ட போலி ஒளிப்பதிவு எனவும், புலிகள் தமது பணத்தின் மூலம் சனல் 4 தொலைக்காட்சியை மீண்டுமொரு முறை பயன்படுத்திக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய இலங்கையின் கொலைக்களம் என்ற ஆவணப்படத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள நிலையில் சில அரசியற்கட்சிகள் இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

குறிப்பாக, ஜே.வி.பி இந்த விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. அத்துடன் மனோகணேசனும் சனல் 4 ஆவணப் படம் குறித்து இலங்கை விசாரணை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது. ■

# ஜனாதிபதி ரணிலுக்கு...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டியதையும் அவர் வலியுறுத்தி இருக்கின்றார்.

சவால்களைக்கண்டு அஞ்சி ஒதுங்காமல் அவைகளை எதிர்கொண்டு பயணித்தால் மட்டுமே நாம் வெற்றியடைய முடியும். மற்றொருவர் வெற்றியில் நாம் சந்தோசப்படுவதைவிட எமது வெற்றியில் உறுதி பேண வேண்டும். எமது நாட்டை அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் பலமான நாடாக, வளமான பொருளாதார நாடாக மற்றும் வேலைத் திட்டத்தை வகுத்து முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாக கைகோர்க்க வேண்டிய தருணம் இதுவாகும். காலம் வரும்வரை நாம் காத்திருக்க முடியாது. காலத்தை நாம்தான் அமைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய வேலைத்திட்டத்தை முன்வைத்துத்தான் ஜனாதிபதி ஐ.நா பொதுச்சபை அமர்விலும் ஜீ 77 மாநாட்டிலும் உரையாற்றத் திட்டமிட்டுள்ளார். சர்வதேசப் பார்வையில் எமது நாடு இனிமேலும் பின்னடைவு நாடாகப் பார்க்க இடமளிக்காமல் எமது சிந்தனைகள், எமது மூளைகள், எமது கைககள் இனிமேல் சர்வதேசத்திடம் தங்கியிருக்க முடியாது. எமது தேசத்தைப் பார்த்து சர்வதேசம் மூக்கில் விரல் வைத்துப் பார்க்கும் படியாக எம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும். சவால்களை எதிர்கொண்டு வெற்றி கொள்ளும் நாடாக எமது நாடு மாற வேண்டும். ஜனாதிபதியின் இந்த இலக்கு நோக்கிய பயணம் சரியான இலக்கை இட்ட அனைவரது கரங்களும் ஒன்றாக இணைய வேண்டும்.

பேதங்களை மறக்க வேண்டும். அரசியல் முரண்பாடுகளை சிறிது காலத்திற்கு மூட்டை கட்டி மூலையில் வைத்து இலங்கையை உலகின் முன்னணி நாடாக மாற்றும் எண்ணக்கருவிற்கு முதலிடம் கொடுப்போம். ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு அனைவரும் ஒரு வாய்ப்பை அளித்தால் வளமான நாடாக எமது நாட்டை மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் அடியெடுத்து வைத்துப் பயணிப்போம். ■

# பூமியை ஆளும்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எம்முடைய தகவல்கள் இங்கு சூறையாடப்படலாம். தவறான வார்த்தைகள், Miss information, dis information உருவாகலாம். தகவல்களைத் தெளிவாக்குவதற்கு உணர்வு ரீதியான விடயங்களை ஆராயாமல் வெளிப்படுத்தக்கூடும். 2030 இல் youtube வலைத்தளங்களிலா 30%ற்கு அதிகமான deep fake video செய்திகள் பரவக் கூடும் என்கின்றனர். அத்தோடு இந்த செயற்கை நுண்ணறிவுக்கு ஆயுத நெறிமுறைகளும் மற்றும் உணர்வு ரீதியான செயற்பாடுகளும் தெரியாததால் ஒரு காலத்தில் மனிதனுக்கெதிராக செயல்படக்கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளது.



அது எதனை அதிகம் தேடுகின்றதோ அதற்கு சார்பாக நடக்கும் தன்மையுள்ளது. எனவே நமக்கு தேவையானதை விடுத்து அதிக தேடல் உள்ளதையே நமக்கு கொடுக்கக்கூடும். எனவே இந்த AI யானது பல பரிணாமங்களில் உயரச் சென்றாலுமே நன்மைகள் என்பதைத் தாண்டி ஒரு சில தீமைகளும் பாரிய அளவிலான தீமைகளாகவே உள்ளது. எனவே மனிதனானவன் எவ்வாறு அதைப் பயன்படுத்துகின்றானோ அதுவும் அவ்வாறே நமக்கு பிரதிபலிக்கும் சில சமயம் மனிதகுல அழிவுக்கே காரணமாகி விடும். எனவே, மனிதன் அவ்வாறான ஆயுதத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை இன்று காணப்படுகின்றது. ■

# பரிதாபமாக வெளியேறிய ஆப்கானிஸ்தான்

ஆசியக்கிண்ண சூப்பர் 4 சுற்றுக்குத் தகுதி பெறுவதற்காக நடப்புச் சம்பியனான இலங்கைக்கு எதிரான போட்டியில் கடைசிவரை பரபரப்பு தொற்றியது. இலங்கைக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் தோல்வியடைந்தாலும் கடைசிப் பந்து வரை இலங்கையைத் திணறடித்தது. இலங்கை வெற்றி பெற்றது. ஆனால், ரசிகர்களின் மனதில் ஆப்கானிஸ்தானின் ஆட்டம் நிலைத்துவிட்டது. இரண்டு ஓட்டங்களால் தோல்வியடைந்த ஆப்கானிஸ்தான் வெளியேற சூப்பர் 4 சுற்றுக்கு இலங்கை தேர்வானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்களில் 291 ஓட்டங்கள் எடுத்தது. ஆப்கானிஸ்தான் 37.1 ஓவர்கள் அல்லது அதற்கு குறைவான ஓவர்களுக்குள் 292 ஓட்டங்கள் அடித்தால் சூப்பர் 4 சுற்றுக்குத் தகுதி பெறலாம் எனக் கணிக்கப்பட்டது. 37.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த ஆப்கானிஸ்தான் 289 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

37.1 ஓவருக்குப் பின்னரும் சூப்பர் 4 இல் ஆப்கானிஸ்தான் தகுதி பெறும் வாய்ப்பு இருந்ததாகவும், அதை தங்களுக்கு சொல்லவில்லை என்றும் ஆப்கானிஸ்தான் பயிற்சியாளர் ஜொனாதன் டிராட் தெரிவித்தது தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி 37.1 ஓவரில் இலக்கை எட்ட முடியாமல் திணறிய போது, நான்-ஸ்டிரைக்கில் இருந்த ரஷித் கான் தலையை பிடித்துக்கொண்டு அமர்ந்த வீடியோ காண்பிக்கப்பட்டது. ஆனால், இதற்குப் பிறகும், ஆப்கானிஸ்தானுக்கு சூப்பர் - சுற்றுக்கு வருவதற்கான வாய்ப்பு இன்னும் இருந்தது. அப்போது, இந்த விடயம் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணிக்கோ, ரஷித் கானுக்கோ தெரியாது.

உண்மையில், ஆப்கானிஸ்தான் அணி 37.2 ஓவரில் 293 ஓட்டங்கள், 37.3 ஓவரில் 294 ஓட்டங்கள் , 37.5 ஓவரில் 296 ஓட்டங்கள் அல்லது 38.1 ஓவரில் 297 ஓட்டங்கள் எடுத்திருந்தால், ஆப்கானிஸ்தான் அணி சூப்பர் சுற்றுக்கு தகுதி பெற்றிருக்கும். இதை யாரும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியிடம் தெரிவிக்கவில்லை.

ஆப்கானிஸ்தான்-இலங்கை போட்டிக்குப் பிறகு, ஆப்கானிஸ்தான் பயிற்சியாளர் ஜொனாதன் டிராட், “நிகர ரன்களின் புதிய சமன்பாடு குறித்து எங்கள் அணிக்கு யாரும் எதுவும் தெரிவிக்கவில்லை. 37.1 ஓவர்களுக்குப் பிறகு என்ன சமன்பாடு என்று நாங்கள் கணக்கிடவே இல்லை. உண்மையில் இதற்குப் பிறகும் 295 அல்லது 297 ரன்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்று அதிகாரிகள்கூட சொல்லவில்லை. 38 ஆவது ஓவரிலும் எங்களால் வெற்றி பெறமுடியும் என்பது எங்களுக்குத் தெரியாது.” என தெரிவித்தார். ரஷித் கான் முட்டி மடக்கி அழுத வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. ரஷித் கானின் வீடியோ குறித்து சமூக ஊடக பயனர்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகின்றனர். ஆப்கானிஸ்தான் அணி 37.1 ஓவர்களுக்குப் பின்னரும் தகுதி பெறும் வாய்ப்பு இருந்தபோதிலும் புதிய சமன்பாடு குறித்து ஆப்கானிஸ்தான் அணி நிர்வாகம் அறிந்திருக்கவில்லை என்று கூறப்படுவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ■



# உலகக்கிண்ண கிரிக்கெட்டுக்கு 400,000 டிக்கெட்கள்

இந்தியாவில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிக்கு சுமார் 400,000 டிக்கெட்டுகளை வெளியிடப் போவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை (பி.சி.சி.ஐ) புதன் கிழமை அறிவித்தது.

“2023 ஐ.சி.சி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டிக்கு டிக்கெட்டுகளுக்கான அதிக தேவையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) ஒப்புக்கொள்கிறது. நடத்தும் மாநில சங்கங்களுடனான கலந்துரையாடலுக்குப் பிறகு, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட போட்டிக்கான சுமார் 400,000 டிக்கெட்டுகளை வெளியிடுவதாக பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கையானது முடிந்த வரை அதிக ஆர்வமுள்ள கிரிக்கெட் ரசிகர்களுக்கு இடமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வரலாற்று நிகழ்வில் அவர்கள் பங்கேற்பதை உறுதிசெய்கிறது,” என்று கிரிக்கெட் அமைப்பின் வெளியீடு தெரிவித்துள்ளது.

அனைத்து போட்டிகளுக்கான டிக்கெட்டுகளின் பொது விற்பனை செப்ரெம்பர் 8 ஆம் திகதி இரவு 8:00 IST முதல் தொடங்கும் மற்றும் ரசிகர்கள் https://tickets.cricketworldcup.com ஐப் பார்வையிடுவதன் மூலம் டிக்கெட்டுகளை வாங்கலாம். அடுத்த கட்டத்தில் டிக்கெட்டுகளின் கூடுதல் விற்பனை குறித்து உரிய நேரத்தில் அவர்களுக்கு அறிவிக்கப்படும். ■



# லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்

கிரிக்கெட், பேஸ்பால்-சாப்ட்பால், கொடி கால்பந்து, லாக்ரோஸ், பிரேக்கிங், கராத்தே, கிக் பாக்ஸிங், ஸ்குவாஷ், மோட்டார்ஸ்போர்ட்ஸ் ஆகிய ஒன்பது விளையாட்டுகளை லொஸ் ஏஞ்சல்ஸ் 2028 ஒலிம்பிக்கில் நடத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

2024 பாரிஸ் விளையாட்டுப் போட்டிகளில் குத்துச்சண்டை, நவீன பென்டத்லான் மற்றும் பளு தூக்குதல் ஆகியவற்றுக்கான நிச்சயமற்ற ஒலிம்பிக் எதிர்காலங்கள் குறித்து தெளிவுபடுத்த ஐ.ஓ.சி வாரியம் திட்டமிடப்பட்டது. இறுதி முடிவு ஐ.ஓ.சி உறுப்பினர்களிடம் உள்ளது. அவர்கள் ஒக்ரோபர் 15-7 வரை இந்தியாவின் மும்பையில் கூடி முடிவெடுப்பார்கள்.

1900 ஆம் ஆண்டு பாரிஸ் விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமே கிரிக்கெட் விளையாடப்பட்டது. ரி20 வடிவத்தில் கிரிக்கெட்டை ஒலிம்பிக்கிற்கு மீண்டும் கொண்டு வருவதற்கான சிறந்த அமைப்பாக இந்தியா நீண்ட காலமாகவே தெரிவிக்கிறது. ஒலிம்பிக்கில் இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி எந்த நிகழ்விலும் மிகப்பெரிய உலகளாவிய தொலைக்காட்சி பார்வையாளர்களைக் கவர முடியும். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 09.09.2023 அன்று வெளியிடப்பட்டது.